மதுரை சீடு குழந்தைகள் பேரவை வழங்கும் தனிச்சுற்று இதழ்

# புதுயுகம்

மலர்கின்ற மொட்டை நற்பண்புகளால் காப்போம்

MADURAI SEED



உலகு 3 பனிமடல் 14 டிசம்பர் 09 - மார்ச் 2010 நன்கொடை ரூ. 2/-

புதுயுகம் தனிச்சுற்று சிற்றிதழ், மதுரை சீடு வழிகாட்டலுடன் மதுரை சீடு குழந்தைகள் பேரவை
குழந்தைகளால் வளமைக் கல்வி நோக்கில் வெளியிடப்படுகின்றது

# செய்தித்தாள்களில் மதுரை சீடு



THE NEW INDIAN EXPRESS 3
★ THURSDAY, OCTOBER 15 | 2009 | MADURAI

City

Other stories

**Workshop on teacher training**

**Madurai:** Madurai SEED organised a workshop on learning and teaching English effectively here recently. Laura Villiger, a teacher from Zurich, Switzerland conducted the workshop which was sponsored by Oxford University Press. Several techniques on making lessons simple to comprehend were taught to the 36 people who attended ■ ENS

THE HINDU
WEDNESDAY, JANUARY 27, 2010

Merchants Association Limited president S.P. Jeyapragasam hoisted the national flag. Vadamalayan Institute of Paramedical Sciences principal T. Jeyarajasekar hoisted the tri-colour.

Madurai Seed celebrated the R-Day function in the presence of its managing trustee A.S. Karthik Bharathi.

தினமணி
சனிக்கிழமை, 17 அக்டோபர், 2009

**இளைஞர்களுக்கான ஆங்கிலப் பயிற்சி**

**மதுரை, அக். 16:** மதுரையில் சீடு நிறுவன இளைஞர்களுக்கான ஆங்கிலப் பயிற்சி முகாம் நடைபெற்றது.

கரும்பாலை உள்ளிட்ட இடங்களில் நடைபெற்ற இந்தப் பயிற்சி முகாமில் சுமார் 40 இளைஞர்கள் பங்கேற்றனர்.

சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஆங்கில ஆசிரியர் டாக்டர் லௌரா வில்லிகர் பயிற்சி அளித்தார்.

இதில் கலந்துரையாடல், குழு விவாதம், செயல்பாடுகள் மூலம் ஆங்கிலம் கற்பிக்கப்பட்டது.

ஏற்பாடுகளை சீடு நிர்வாக அறங்காவலர் ஏ.எஸ்.கார்த்திக் பாரதி உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

தினமணி
திங்கள்கிழமை, 4 ஜனவரி, 2010

**கங்கண சூரிய கிரகணம் விழிப்புணர்வுக் கூட்டம்**

**மதுரை, ஜன. 3:** 108 ஆண்டுகளுக்குப் பின் தமிழகத்தில் கங்கண சூரியகிரகணம் ஜனவரி 15-ம் தேதி நடைபெற உள்ளது.

இது குறித்த விழிப்புணர்வு மற்றும் விளக்கக் கூட்டம் மதுரை சீடு தொண்டு நிறுவனத்தின் சார்பில் அண்மையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கங்கண சூரிய கிரகணம் குறித்த செய்திப் படம் திரையிடப்பட்டது.

கங்கண சூரிய கிரகணம், அது பற்றிய மூடநம்பிக்கைகள், கிரகணம் நடைபெறும் முறை, சூரிய கிரகணத்தைப் பார்க்கும் முறை ஆகியன குறித்து மதுரை கலீலியோ அறிவியல் மையத்தைச் சேர்ந்த சத்யமாணிக்கம் மற்றும் கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக விரிவுரையாளர் தேவி உள்ளிட்டோர் விளக்கம் அளித்தனர். கூட்டத்தில் கரும்பாலைப் பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான குழந்தைகள், இளைஞர்கள் பங்கேற்று பயன் பெற்றனர்.

இதற்கான ஏற்பாடுகளை மதுரை சீடு நிறுவனத்தின் அறங்காவலர்கள் கார்த்திக், பாரதி, இயக்குநர் மன்சூர் அலி உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

## 2009-2010 நினைவில் நிற்கும் நிகழ்வுகள் சில....




நிறுவன நாள் விழா



வாண்டுகள் முகாம்



மார்கழி உற்சவம்




புத்தாண்டு விழா



தேக்வாண்டோ முகாம்



கிறிஸ்துமஸ் விழா

# நமது கனவு....

புதுயுகத்தின்

இனிய வாசகர்களுக்கும், மதுரை சீடு இன் ஆதரவாளர்களுக்கும், குழந்தைகளுக்கும், பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், எமது அன்பு வணக்கங்கள்.

புதுயுகம், மதுரை சீடு குழந்தைகளிடையே படைப்பார்வத்தை ஊக்கப்படுத்துவதில் உற்ற துணையாக இருந்து வருகின்றது. அதற்கு உதாரணம் இவ்விதழில் உள்ள பக்கங்கள். குழந்தைகள், பேச்சு, கவிதை, கட்டுரைப் போட்டிகளில் பங்கு கொண்டு, பள்ளிகளில் பரிசுகளை வென்று வருவதும். அதற்கு காரணமாக புதுயுகம் படைப்பரங்க வகுப்புகள் உள்ளன என்று நம்மிடம் நன்றியுடன் வந்து சொல்வதும் மகிழ்ச்சிகரமான நிகழ்வுகள். இவ்வருடம் நுண்கலை மட்டுமல்லாது

*பிரம்மாண்டமாக நடைபெற்ற நிகழ்கலை நிகழ்ச்சிகளான*

தொண்டர் பாரிகணேசன் திருமணவிழா கலைநிகழ்ச்சி
ஹோட்டல் மெட்ரோபோலில் நடைபெற்ற வான்முகில் கலைவிழா
காந்தி மியூசியத்தில் நடைபெற்ற நிறுவனநாள்விழா கலைநிகழ்ச்சிகள்
புத்தாண்டு விழா கலைநிகழ்ச்சிகள்

போன்றவை குழந்தைகளின் கல்வி ஆர்வத்திற்கு உந்துகோலாக இருந்தன. குழந்தைகள் பள்ளிக்கு தொடர்ந்து சென்றிடவும் கல்வியினால் சமூகத்தில் ஏற்ற தாழ்வுகள் மாறிடவும் மதுரை சீடு பல்வேறு வகைகளில் பணி செய்து வருகின்றது. அப்பணிகள் சிறப்புடன் தொடரும்.

2009 - 2010 மதுரை சீடு-ல் அனைவருக்கும் சிறந்ததொரு ஆண்டாக இருந்தது. தல்லாகுளம் கமலாநகரில் புதிதாக மையம் ஒன்று கரும்பாலை இளைஞர்களால் தொடங்கப்பட்டது. கரும்பாலை கல்வி மையங்களில் மட்டும் இவ்வாண்டு 208 ஆண் குழந்தைகள், 193 பெண் குழந்தைகள் என மொத்தம் 402 குழந்தைகள் பயனடைந்துள்ளனர். மதுரை சீடு-ல் 120 பேர் மட்டுமே பயனடையும் வகையில் மையங்கள் உள்ளன. 180 குழந்தைகள் தொடர்ந்து மையங்களுக்கு வருகின்றனர். வரும் ஆண்டில் நம்மிடம் வரும் குழந்தைகள் அனைவருக்கும் கல்விக்குரிய எல்லா சூழ்நிலைகளையும் உதவிகளையும் வழங்க வேண்டும் என்பது நமது கனவு. அதற்காக கடுமையாக உழைக்கின்றோம். உங்களின் ஆதரவும் எங்களுக்கு தேவை.

2009 - 2010 ஆம் ஆண்டில் சமச்சீர் கல்வி குறித்தும் கட்டாயக் கல்வி குறித்தும் ஆரோக்கியமான செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. கண்டிப்பாக வரும் ஆண்டு நமக்காகத்தான், வெற்றிகள் காத்திருக்கின்றன.

மீண்டும் சந்திப்போம்

ஆசிரியர் குழு
V.திவ்யபாரதி (XI)
M.மாணிக்கராஜ் (X)
S.முத்துகணேஷ் (VIII)
S.ஷர்மிளா (VIII)




மதுரை சீடு நற்பணிகளில்
A.S.கார்த்திக்பாரதி
C.அருண்குமார்


## என் தங்கச்சி பாப்பா

நான் வீட்டுல தூங்கறப்ப என் மேலதான் [illegible] [illegible]. ஸ்கூலுக்கு போறப்ப [illegible] [illegible] என் தங்கச்சி ரொம்ப [illegible]. நான் ஸ்கூலுக்கு போறதுக்கு [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]

B.பவானி, III வகுப்பு



G.மார்ட்டின்ஜினோ, I




அழகு, II

## [illegible]

நான் மூணாம் வகுப்பு படிச்சு முடிச்சு போறேன். மூணாம் வகுப்பு படிக்கறப்ப மதுரை சிட்டிக்கு [illegible] [illegible] எக்கோ பார்க், அவதார் படம், காந்தி மியூசியம் இதெல்லாம் போனோம். இந்த [illegible] ரொம்ப பிடிச்சிருந்துச்சு

அ.ஜெர்க்பிர்தெளஸ் ப்ரியதர்ஷன், III B



க.அபினாஷ், I வகுப்பு

## எனக்கு மீசை வளர்ந்தா

[illegible] என்ன, நான் தான் சின்ன வயசு [illegible]. என்னை விட சின்னப் பிள்ளை [illegible] [illegible] தினம் மீசைய வெட்டி [illegible] பார்ப்பேன். மீசைய [illegible] விடுவேன். மீசைய முறுக்கி எல்லாரையும் பயமுறுத்துவேன். மீசைய வைச்சு என் தம்பிய [illegible]. மீசைய பெருசா வளர்ப்பேன். மீசைக்கு எப்பவும் சீப்பு வச்சிருப்பேன். எனக்கு மீசை வளருமா?

R.சக்திவேல் II வகுப்பு



S.ராம்குமார், IV A

## [illegible]

[illegible]

M.[illegible]

IV [illegible]

# அறிவுசுரங்கம்

## பழமொழி

- ஒரு தாய் ஆயிரம் ஆசிரியர்களுக்கு சமம்.
- உலகில் காசு கொடுக்காமல் கிடைப்பது அறிவுரை
- மரியாதை கொடுக்கத்தெரியாதவனுக்கு தலைமை தாங்கத் தெரியாது.

## ஹைக்கூ

**நட்பைப் பெறுவதில் நிதானமாக இரு.**

**நட்பைப் பெற்ற பின் உறுதியாக இரு.**

B.கிரிஜா
VIII

## ஒரு யூனிட் மின்சாரம் ...

மாதந்தோறும் மீட்டரில் கணக்குப் பார்த்து எழுதிவிட்டுப் போகும் மின்சாரத்துறை ஊழியர்களிடம் இந்த மாதம் எத்தனை யூனிட் ஆகி இருக்கிறது? என்று கேட்பது ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள வழக்கமான கேள்வி. அதிலிருந்து மின்சார பில் அந்த மாதம் எவ்வளவு ஆகும் என்று கணக்கிடுவதற்காகத்தான் அந்தக் கேள்வி. ஆனால் ஒரு யூனிட் மின்சாரத்தில் என்னென்ன செய்யலாம் என்று உங்களுக்குத் தெரியுமா ?



ஒரு யூனிட் மின்சாரத்தை உபயோகிப்பது

- ★ 2500 காலன் தண்ணீரை 50 அடி உயரம் பம்ப் செய்யலாம்.
- ★ 40 வாட் விளக்கை 25 மணி நேரம் எரிக்கலாம்.
- ★ 60 துண்டு ரொட்டிகளை வாட்டிச் சமைக்கலாம்.
- ★ 60 கப் காபி அல்லது தேநீர் தயாரிக்கலாம்.
- ★ நான்கு பேருக்கு சிற்றுண்டி தயார் செய்யலாம்.
- ★ ஆறு காலன் வெந்நீர் போட்டு குளிக்கலாம்.
- ★ ஆறு மணி நேரம் தரையைப் பாலிஸ் செய்யவோ, சுத்தம் செய்யவோ உபயோகிக்கலாம்.
- ★ ஒரு தையல் மிஷினை 20 மணி நேரம் ஓட்டலாம்.
- ★ ஒரு சலவை மிஷினில் ஆறு பேர்களுடைய உடையை இரண்டு வாரங்களுக்கு வெளுக்கச் செய்யலாம்.
- ★ தலைக்கு மேல் சுற்றும் மின் விசிறியை 10 மணி நேரம் உபயோகிக்கலாம்.
- ★ 180 பவுண்டு வெண்ணெய் எடுக்கலாம்.
- ★ 2500 பால் புட்டிகளை கழுவலாம்.
- ★ இரண்டு காலன் தண்ணீரைக் கொதிக்க வைக்கலாம்.
- ★ பத்து பவுண்டு ஐஸ் கட்டி செய்யலாம்.

## விடுகதை

1. பெட்டியை உடைத்தால் இரண்டு கிருஷ்ணன் அல்லது ஒரு கிருஷ்ணன் பிறப்பான் அவன் யார்? - வேர்கடலை
2. குளிக்கலேனா சிவப்பா இருப்பான் குளித்தால் கருப்பா இருப்பான் அது யார்? - நெருப்பு
3. வளர்ப்பாள் மகா கெட்டிக் காரி அவள் யார் ? - கோழி
4. பருப்பு குழம்பு மணப்பதேன் படைவீரன் சாவதேன்? - பெருங்காயத்தினால்
5. எருக்கம் பூ பழுப்பதேன் எருமைக் கன்று அழுவதேன்? - பால்வத்திப் போவதினால்

S.திருவருட் செல்வி

## சிறப்பு மிக்க ஊர்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மல்லிகை | - மதுரை | ஜல்லிகட்டு | - அலங்காநல்லூர் | தீபம் | - திருவண்ணாமலை |
| பூட்டு | - திண்டுக்கல் | பொம்மை | - தஞ்சாவூர் | பஞ்சாமிர்தம் | - பழனி |
| அல்வா | - திருநெல்வேலி | உப்பு | - தூத்துக்குடி | லட்டு | - திருப்பதி |
| கோவில் | - மதுரை | புனிததலம் | - காசி | அருவாள் | - திருப்பாச்சி |
| பட்டு | - காஞ்சிபுரம் | ஜவுளி | - ஈரோடு | காற்றாலை | - ஆரல்வாய் |
| கடல் | - கன்னியாகுமரி | முட்டை | - நாமக்கல் | | |

By
M.சூரியா
VIII

## என்னைப் போல...

நம்பிக்கையில் அப்துல் கலாமாகவும்
அறிவில் விநாயகராகவும்
அழகில் மகாலெட்சுமியாகவும்
கண்ணில் மீனாட்சியாகவும்
சொல்லில் அனுமானகவும்
படிப்பில் சரஸ்வதியாகவும்
குணத்தில் அன்னையைப் போலவும்
மனத்தில் என்னைப் போலவும்
இருந்தால் வெற்றி நிச்சியம்

B.கிரிஜா
VII



## என்கனவு

*கனவிற்குள் ஓர் அதிசயம்*
*இயற்கையின் அழகு என் கண் முன்னே*
*பறவையின் சலசலப்பு என் காதுகளில் பாடலாய்*
*விலங்குகளின் நேசம் எனக்கு கிடைப்பதுப் போல*
*என் கல்வி பயண வாழ்க்கை தோன்றிய இடம் சீடு*
*அதிசயமே அதிசயமே*
*கனவும், மதுரை சீடும்,*
*அதிசயத்தின் உலகமே*

S.முத்துகணேஷ்
VIII

## கனவுக்குள்ளே ஒரு அற்புதம்

மலை போலே மறையாத நினைவு
என் நெஞ்சில் பாய்ந்தது
சிலிர்சிலிர்த்த பறவைகளின் ஓசை
என் பாட்டுக்கு அடியெடுத்து தந்தது
பாட ஆசை ஆனால்
அது என்னை கிறங்கடிக்க செய்யும் ஓசை

A.சர்மிளா *(VIII)*

## நண்பா

உன்னை என் இதயம்
என்று சொல்லமாட்டேன்
உன்னை துடிக்க விட்டு
வேடிக்கை பார்க்கமாட்டேன்

D.சுரேஷ்கண்ணன் VIII

## ஜோரு

வீட்டுல இருந்தா போரு
சீடுக்கு வந்தா ஜோரு

A.மூகாம்பிகா (VII)

K. கீர்த்தி
VIII



## போனேனே

மலை பார்த்தேன்
குரங்கு பார்த்தேன்
குளம் பார்த்தேன்
சிலைகள் பார்த்தேன்
சாமி பார்த்தேன்
கொரித்துப் பார்த்தேன்
மலை போனேன்
நான் அழகர் கோயிலுக்கு போனேன்



R. மக்கந்து நிலவு IV ம் வகுப்பு


# நாங்கள் வரைந்தவை




M.ஜினியா V- A
வேர்கள் அரங்கம்



J.ஜாஸ்மீன்



B.விக்னேஸ்வரன் VII



V.ஸ்ரீநாத் VI





S.முத்துகணேஷ் VIII



R.காயத்ரி VI

# ரயில் பயணம்

கடந்த காலத்தின் வியப்புகள் எதுவும் இன்று இல்லை. இன்று அரிதாகவே சிறுவர்கள் வியப்படைகிறார்கள் வீடியோ கேம்களில் வெளிப்படும் மிதமிஞ்சிய வன்முறையைத் தவிர, வேறு எதுவும் சிறார்களைக் கிளர்ச்சிகொள்ளச் செய்வது இல்லை. எத்தனையோ ஆயிரம் ஏதேதோ ஊர்களுக்கு ரயில் பயணம் எதையோ கற்றுதருகிறது ஒவ்வொரு பயணத்தின் போதும் மனசு விசாலமடைவதை உணர்ந்து இருக்கிறேன். ரயில் வேகத்தில் ஓடி மறையும் மரங்கள் தூரத்து அடிவானம் தெளிவற்று ஓடி மறையும் ஆறு. எதிரே கடந்து செல்லும் ரயிலில் தோன்றி மறையும் முகங்கள் உறக்கத்திலும் கலந்துவிடும் ரயிலின் ஓசை.

ரயிலும் ரயில் நிலையமும் ரயில் பயணிகளும் என்றைக்கும் வசீகரமாகவே இருக்கிறார்கள் சொல்லப்படாத கதைகள், வலிகள், சந்தோஷங்கள், பிரிவு... ரயில்நிலையங்களில் சிதறிக்கிடக்கின்றன. ஒவ்வொரு ரயில் நிலையத்தின் வாசலும் கனவின் நுழைவாயிலே அது நம்மை எங்கோ அழைத்துப் போகிறது அல்லது திரும்ப அழைத்து வருகிறது.



ரயில் பாதைகள் அமைக்கப்பட்டதும் ரயிலின் வருகையும் அதனால் ஏற்பட்ட மாற்றங்களும் நடந்த முக்கியச் சம்பவங்களும் தனித்து விரிவாக எழுதப்பட வேண்டியவை. இன்னமும் அதை யாரும் முழுமையாக எழுதவில்லை. ரயிலின் வருகை மனிதர்களின் தூரம் செல்ல வேண்டிய பயத்தை விலக்கியது.

கிராமங்களில் சிறுவர்கள் வரிசையாக ஒருவர் பின் ஒருவர் நின்று கொண்டு ரயில் விளையாட்டு ஆடுவார்கள். அந்த ரயில் எங்கே நிற்கும் யாரை ஏற்றிக்கொள்ள வேண்டும்? என்பது வேடிக்கையாக இருக்கும். ரயில் போலவே சத்தமிடுவார்கள் உலகில் எங்காவது சிறுவர்களுக்கு என்று தனியே ரயில் ஓடுகிறதா என்ன?. அன்று கிராமங்களில் சிறுவர்கள் ரயில் மண்பாதைகளில் ஓடியது. இருட்டுக்குள்கூட பயம் இன்றி ரயில் விளையாட்டு தொடரும். நிஜ ரயிலைவிடச் சிறுவர்கள் விளையாட்டு ரயிலை விரும்பினார்கள்.

ரயில் நிலையம் அருகில் உள்ள கிராமங்களை விழிக்கச் செய்வதே ரயில் ஓசைதான். காலை கடந்து செல்லும் ரயிலும் மாலை திரும்பி வரும் ரயிலும் கிராமத்தின் ரயில் நிலையத்தில் நிற்காதபோதும் கூட அந்தச் சத்தம்தான் கடிகாரம் போல அவர்களை இயக்கிக்கொண்டு இருந்தது.

பள்ளிச் சுற்றுலாவுக்கு ரயிலில் அழைத்துச் செல்வார்கள். ரயில் ஜன்னல் முழுவதும் கைகளாக முளைக்க ஊர் போய் சேரும் வரை மாணவர்கள் கூச்சலிட்டபடியே வருவார்கள். அப்போது ரயில் மிக வேகமாகப் போய் கொண்டு இருப்பதுபோலவே தோன்றும். ரயிலில் போய் வந்த கதையை நினைத்து நினைத்துச் சொல்லிக் கொண்டு இருப்பார்கள்.

நன்றி: எஸ். இராமகிருஷ்ணன்
ஆனந்த விகடன்

# கூட்டாஞ்சோறு தின்ன கதை

சின்ன வயசு ஞாபகங்களில் என்னால் மறக்க முடியாத நிகழ்ச்சி ஒன்னு இருக்கு. அது சந்தோசமா அல்லது தப்பான்னு நீங்கதான் சொல்லனும் அன்னைக்கி எங்க கூட்டாளிகளின் திட்டம் கூட்டாஞ்சோறு ஆக்கி தின்பது தான். அவரவர் வீட்டில் போய் அரிசி, காய், பானைனு ஏதாவது ஒன்னை எடுத்து வரனும். அது கிட்டதட்ட திருட்டுதான். எப்படின்னா பெரியவங்க நேரா கேட்டா தரமாட்டாங்க. அப்ப தெரியாமா எடுக்கதானே வேணும். முன்ன ஒரு முறை எடுத்துட்டு போயி வீட்டுல வாங்கின பூசை மறக்க முடியல. அதனால நானும் என் அத்தை மக பிரியங்காவும் யோசிக்கிட்டே வீட்டுக்கு போனோம். வீட்டுக்கு போன வழியில்ல ஒரு வீடு திறந்து கிடந்தது.ஒரு அக்கா தூங்கிட்டு இருந்தாங்க. என்னவோ தெரியலை வாடி பிரியங்கா வீட்டுக்குள்ள போவோமுனு உள்ளே கூட்டிட்டு போயிட்டேன். அங்க அடுப்படி சொலவுல தக்காளி, கத்திரிக்கா, கருவேப்பிலை இருந்துச்சு ஆனா எதுவும் எடுக்கலை. அடுப்படியிலிருந்து சோறும் குழம்பும் பிரியங்காவ யோசிக்க வச்சது. பிரியங்கா என்கிட்ட சொன்னா கூட்டமா சேர்ந்து சோறு ஆக்க போறோம். சாப்பிட போறோம். எதுக்கு கஷ்டபட்டுகிட்டு, சோறையும் குழம்பையும் எடுத்துகிட்டு போயி கூட்டாஞ்சோறு சாப்பிடுவோம். என்று சொன்னாள். இரண்டு கிண்ணம் சோறு, குழம்பையும் தூக்கிட்டு நடக்கறப்ப அவளோட சின்ன கைகள் பாரம் தாங்காமல் கீழே விட்டுருச்சு. அப்புறமென்ன தூக்கத்தில் இருந்து எழுந்த அக்கா சும்மாவா இருப்பாங்க எழுந்து வந்து, அடி கொடுக்க வர நாங்க எஸ்கேப் .

பாவமா நாங்க கூட்டாஞ்சோறு ஆக்குற இடத்துக்கு வந்தோம். எங்களை யாரும் பெரிசா மதிக்கலை ஒன்றும் கொண்டு வராதவங்களுக்கு என்ன மரியாதை கிடைக்கும். மாங்கு மாங்குனு எல்லாரையும் விட ஜாஸ்தியா வேலை செய்யறதா காட்டிட்டு கூட்டாஞ்சோறு சாப்பிட்டுத்தான் வீட்டுக்கு போனேன்.

S.சரண்யா IX



# என்னை பாதித்த கலைச் செல்வி ஆசிரியர்.

நான் ஏழாம் வகுப்பு படிக்கறப்ப எங்கள் பள்ளிக்கு கலை டீச்சர் வந்தார். அனைவரிடமும் அன்பாக பழகுவார். அது மட்டுமின்றி எங்க எல்லாத்துக்கும் நல்ல விஷயங்களை கற்று கொடுத்தார். தினமும் அறிவுரை கூறினார். ஒருநாள் எல்லோருக்கும் கோலம் போடுறதை பத்தி ஜாலியா சொல்லி கொடுத்தாங்க பள்ளிக்கூடம் போகவே ரொம்ப ஆசையா இருக்கும் எங்க கிளாஸ்ல ஆப்சென்டே இருக்காது. ஒவ்வொரு நாளும் சந்தோசமாக இருந்தது. எல்லா ஜாலிக்கும் ஒரு முடிவு இருக்கும் போல. ஒரு நாள் டீச்சர் பள்ளியை விட்டு போறேனு சொன்னாங்க எங்க எல்லோருக்கும் ஒரே கஷ்டம் அதை பத்தியே பேசிட்டு இருந்தோம். அந்த கஷ்டமான நாள் வந்தது. அந்த நாள் முழுவதும் சந்தோசமாக ஒரு வித சோகம் கலந்து இருந்தது. டீச்சர் எங்களை குரூப் போட்டோ எடுத்தாங்க. நாங்க பலூன் உடைத்து கலர் பேப்பர், ஜிகினா தூவி விளையாடினோம். டீச்சர் வீட்டுக்கு போகும் போது எல்லோருக்கும் மிட்டாய் கொடுத்தார். ஒரு நோட்டில் நடுபக்கத்தில் அனைவரிடமும் கையெழுத்து வாங்கிட்டு மிட்டாய் பேப்பரை அந்த நோட்டில் வைத்தோம். ஆசிரியருக்கு அழுத முகத்துடன் விடை கொடுத்தோம் . கலை டீச்சரைப் போல எல்லா டீச்சரும் இருக்க வேண்டும் . கண்டிப்பாக அவரை ஒரு நாள் பார்ப்பேன். டீச்சர் நீங்க எங்க இருக்கீங்க! ...

M.மகுடீஸ்வரி IX

# ஆசிரியரை மாற்றிய மாணவிகள்

நான் 11ஆம் வகுப்பு படித்து கொண்டிருந்தேன். கணக்கு பாடத்துக்கு பயிற்சி ஆசிரியர் வந்தார். அவரால் பாடம் நடத்தும்போது தமிழே பேச முடியவில்லை. நாங்கள் தூங்குவது, பேசுவது என வகுப்புநாட்களை கழித்தோம், கணக்கும் புரியவில்லை, பேச்சும் புரியவில்லை என வகுப்பறை அதிபுத்திசாலிகளினால் ஆசிரியர் தெளிவு பெற்றார். தமிழ் கற்றார். ஆங்கிலம் மறக்குமளவுக்கு அழகு தமிழில் கொஞ்சும் குரலில் பாடம் நடத்தினார். பயிற்சி முடிந்து போகும் போது தமிழை மிகவும் நேசிக்கிறேன் என்றார். நாங்கள் விரைவில் ஆசிரியர் பணிகிடைக்க வாழ்த்துகள் தந்து விடையளித்தோம்.

P.உமாமகேஸ்வரி XII Std.

## மினி பேட்டி இரண்டு

1. பெயர் : முத்துமாரி
வகுப்பு : 12
பள்ளி : காக்கைபாடினியார் மேல்நிலைப்பள்ளி
லட்சியம் : ஆசிரியை
பிடித்த ஆசிரியர் : 8ஆம் வகுப்பு சுசீலா டீச்சர்
சீடு-ல் பிடித்த நிகழ்ச்சி : கார்த்திக்பாரதி அண்ணன் கல்யாணம்

2. பெயர் : எஸ்.நாகலெட்சுமி
வகுப்பு : 12
பள்ளி : பொன்முடியார் மேல்நிலைப்பள்ளி
லட்சியம் : ஆசிரியர்
பிடித்த ஆசிரியர்: 12 ஆம் வகுப்பு கணக்கு பதவியியல் ஆசிரியை

## அன்புள்ள அம்மா



அம்மா உன்னை
எனக்கு ரொம்ப பிடிக்கும்
நீ கேட்டதை யெல்லாம்
வாங்கி தர
நீ சொல்ற எந்த வேலையும்
நான் தட்டியதில்லை
நான் என்ன தப்பு செஞ்சாலும்
மன்னிக்கிற உலகத்திலே எனக்கு
ரொம்ப பிடிச்ச விஷயம் நீதானம்மா

ஜெ. பாண்டி செல்வி

## முதுகுக்கு பின் இரண்டு கண்கள் இருந்தால்



- என் வண்டிக்கு மிரர் தேவையில்லை நானே சமாளிச்சுக்குவேன்.
- திரும்பி பார்க்க தேவையில்லை கழுத்துக்கு வேலையே இல்லை சுளுக்கு பிரச்சனையோ இல்லவே இல்லை
- முதுகுல அடிப்பட்டா மற்றவர்கள் தேவையில்லை நானே பார்த்துக்குவேன்.
- தேர்வுக்கு படிக்க தேவையில்லை. பின்னாடி உட்கார ஆளே துணை எக்ஸாம் சூப்பர்வைசர் பாடு திண்டாட்டம் தான் ம் ஜாலியோ ஜாலி.
- அம்மாகிட்ட மொட்டை வேண்டுதலிருந்து தப்பிக்கலாம் மொட்டை எடுக்க முடியாதே
- சர்க்கஸ்ல எனக்கு வேலை உறுதி
- முக்கியமா பின்னாடி வந்து அடிச்சுட்டு எவனும் ஒளிய முடியாதுல்ல டே வாங்கடா அடிங்கடா பார்ப்போம்.

விக்னேஷ் IX



## விவேகானந்தர் சொன்னவை.

- புத்தகத்தில் இருக்கிறது. பிறர் சொன்னார்கள் என்பதற்காக எந்த தத்துவத்தையும் ஏற்காதீர்கள். நீங்களே பகுத்தறிந்து சோதனை செய்து பார்த்து எதையும் ஏற்று கொள்ளுங்கள் என்று சொன்ன ஒரே சாமியார் இவர்தான்!
- உடலை பலமாக வைத்துக் கொண்டால் தான் உள்ளம் பலமாகும் என்பது அவரது போதனை!
- ஒரு விதவையின் கண்ணீரை துடைக்க முடியாத ஓர் அநாதையின் வயிற்றில் ஒரு கவளம் சோற்றை இட முடியாத, கடவுளிடத்திலோ, சமயத்திலோ, எனக்குக் கொஞ்சம் கூட நம்பிக்கை கிடையாது.
- முதலில் உங்களிடமே நம்பிக்கை கொள்ளுங்கள் அதன்பின் ஆண்டவனை நம்புங்கள் உணர்வதற்கு இதயமும் எண்ணுவதற்கு அறிவும், உழைப்பதற்கு உறுதியான உடலும் நமக்கு வேண்டும். இதயத்துக்கும் அறிவுக்கும் போராட்டம் மூளுமானால் இதயத்தைப் பின்பற்றி நாங்கள்!

தொகுப்பு
M.மதன் IV

# பாடல்கள்

இயற்கையின் அழகை ரசித்து சொல்வதற்கு
வார்த்தை ஒன்றும் இல்லை தோழா
பறவையின் குரலை புரிந்து கொள்வதற்கு
நாமும் சென்றிடுவோம் வாடா
கண் இருந்தும் பார்க்காமல்
காது இருந்தும் கேளாமல்
வாய் இருந்தும் பேசாமல் இருந்தது போதும்
இனி எழுந்து வாடா – நீ
சீடு செல்ல வாடா
உலகின் அழகை ரசிக்க சீடு வேண்டும் வாடா
உழைப்பதற்கு கரங்கள் உண்பதற்கும் கரங்கள்
வணங்குவதற்கும் கரங்கள் வாழ்த்துவதற்கும் கரங்கள்
வாடா நீ எழுந்து வாடா

மதன் IX
முத்துகணேஷ் VIII

கண்ட இடத்தில் குப்பையை தான் போடாதீங்க
நீங்க போடாதீங்க
காற்று தான் தூசு மாசு பண்ணாதீங்க
நீங்க பண்ணாதிங்க
ரோட்டுல தான் எச்சிலை தான் துப்பாதீங்க
நீங்க துப்பாதீங்க
கண்ட இடத்தில் குப்பையைத் தான் எரிக்காதீங்க
எரிக்காதீங்க நீங்க எரிக்காதீங்க
ஓசோன் ஓட்ட விழுந்து நீடிக்குமுங்க
அபாயம் நீடிக்குமுங்க
நம்ம நாட்டு சுற்று சூழலை காக்கணுமுங்க
கண்ட இடத்தில் குப்பையை தான் போடாதீங்க.

விக்னேஷ்வரன்
மணிகண்டன்

லா லா லா லலல லா லா லலல
குழந்தைகளே குழந்தைகளே வாண்டுகள் அரங்க குழந்தைகளே (2)
சொல்ல சொல்ல சிரிக்கும் குழந்தைகளே (லா லா லா )
சுற்றி சுற்றி வருகின்ற குழந்தைகளே
சூது வாது தெரியாத குழந்தைகளே
விழுந்து தவழ்ந்து வருகின்ற குழந்தைகளே
சீக்கிரம் வாங்க விரைந்து முன்னேறுவோம்
லா லா லா லலல லா லா லலல

ஜுலி முகாம்பிகா VI

எண்ணங்களோ என் முன்னே தோன்றி
விதவிதமான வண்ணங்களில் தோன்றி
என்னை கவர்ந்ததுவோ
ஆஹா என்னை கவர்ந்ததுவோ
ஏழு வண்ண நிறத்தில் தோன்றி
எந்தன் மனதை கவர்ந்து இழுத்ததுவோ

முத்துலெட்சுமி VI
உமாமகேஸ்வரிVI
லெட்சுமி VI

குழந்தைகளே குழந்தைகளே ஒற்றுமையாய் வாழ்வோமே
குழந்தைகளே குழந்தைகளே நாமும் சுகாதாரமும் பெறுவோமே
குழந்தைகளே குழந்தைகளேஅறிவியல் வளர்ச்சியை பெருக்குவோமே

குழந்தைகளே குழந்தைகளே விழித்த உடன் படிப்போமே
குழந்தைகளே குழந்தைகளே சீடுக்கு தவறாமல் சென்றிடுவோமே
குழந்தைகளே குழந்தைகளே அளவோடு விளையாடி மகிழ்ந்திடுவோமே
குழந்தைகளே குழந்தைகளே இயற்கையை பெருக்கிடுவோமே.



விக்னேஷ்வரன்
மணிகண்டன்

# பாடல்கள்

பெண்கள் படித்தால் குடும்பம் உயரும் (ஆ.ஆ)
குடும்பம் உயர்ந்தால் நாடு வளரும்
சிறுவர் சிறுமியெல்லாம் பள்ளிக்கு போறாங்க
ஆனால் அம்மா அப்பாதான் தடுத்து நிறுத்துறாங்க
சில பேர அம்மா அப்பா பள்ளிக்கு அனுப்புறாங்க
அந்த புள்ளைக அதை புரிஞ்சுக்காம ஊரு சுத்துறாங்க
காசு பணத்தை சேமிக்க வேண்டும்
அதை சிக்கனமாய் செலவு செய்து காண்பிக்க வேண்டும்
சிறுவர் சிறுமியெல்லாம் இயற்கையை காத்திட வேண்டும்
காத்திட்ட பிறகு நமக்கு எல்லாம் நல்லது தானங்க
சிறுவர் சிறுமியெல்லாம் மரங்களை வளர்த்திட வேண்டும்
வளர்த்திட்ட பிறகு மழையைப் பெற வேண்டும்.

சூரியாVII
கார்த்திக்





லலலல லா லலல லா லா
சின்னஞ்சிறு பிள்ளைகளே
சிறுஉரை ஒண்ணு கேளுங்களேன்
சுறு சுறுப்பாய் ஓடி வாங்க
விறு விறுப்பாய் இருக்குனுங்க
துள்ளி துள்ளியே
சிறகடித்து பறந்திடுங்க
ஆனந்தமாய் இருந்திடுங்க
மகிழ்ச்சியாய் ஆடிடுங்க
நன்மையை தேடிடுங்க
தீமையை விலக்கிடுங்க
வெற்றியை நாட்டிடுங்க
மகிழ்ச்சியை பரப்பிடுங்க
துள்ளி துள்ளி
சிறகடித்து பறந்திடுங்க - 2
லலலல லா லா லல - 2
சின்னஞ்சிறு

திருவருட்செல்வி VIII
ஜென்சிராணி VIII

சீடு எங்களோடு வீடு
செல்ல செல்ல சீடு இது எங்களோடு வீடு
கலக்கலானா சீடு இது கருத்து சொல்லும் சீடு
அட இது கருத்தும் சொல்லும் சீடு

ஞாயிற்றுக்கிழமையானா
ஆட்டம்தான் பாட்டம்தான்
அட ஆட்டம்தான் பாட்டம்தான்

தினமும் மாலை வருவோம் உற்சாகமாய் படிப்போம்
அட உற்சாகமாய் படிப்போம்
குழந்தைகளின் வங்கி எங்க சீடு-இல் தானே இருக்கு
வேறு எங்கும் இல்ல சீடு-இல் தானே இருக்குது.
அனைவரும் சீடு-இல் சேர்ந்திடுவோமே ஒற்றுமையாக இருப்போம்
அட ஒற்றுமையாக இருப்போம்

ஸ்டிபன்ராஜ் VI
ராமகிருஷ்ணன் VI

பொம்மை ஒன்று வாங்க போனேன்
காசு இல்லாமல் திரும்பி வந்தேன்
ஏக்கத்தோடு நானும் சென்று
கண்ணீரோடு திரும்பி வந்தேன்

காசு இல்லை என்னிடம்
கண்ணீர் மட்டும் என்னிடம்
எங்கள் அப்பா தருவாரா
இல்லையென்று சொல்வாரா

பொம்மை வாங்க காசு தந்தால்
பொம்மை வாங்கி நானும் மகிழ்வேன்

அ.ஜோயல் பைரோஸ் ப்ரியதர்ஷன்
ச. நமச்சிவாயம்

# கமலா நகரில் புதிய திறந்தவெளி சீடு மையம்



தல்லாகுளம் நீச்சல்குள பகுதிக்கும் செங்குந்தர் பள்ளிக்கும் இடையில் உள்ள பகுதி மக்களால், வாழைத்தோப்பு என்று அழைக்கப்படுகிறது. நீச்சல்குளம் பின்புறம் உள்ள சாலை கரும்பாலையையும் தல்லாகுளத்தையும் இணைக்கிறது. சுமார் 50 குடும்பங்கள் வாழுகின்றன. பொருளாதாரத்தில் பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழும் இப்பகுதியில் தொழிலாளர்கள் நிறைந்துள்ளனர்.

இப்பகுதி பெண்களின் கோரிக்கையை ஏற்று மதுரை சீடு திறந்த வெளி மையம் ஒன்றை 8/2/09 அன்று அமைத்தது. மைய பொறுப்பாளராக தொண்டர் மாரிமுத்துவும் ஆசிரியத் தொண்டர்களாக மருதுபாண்டி, சிவகுருநாதன், சுரேஷ்ராஜன், அசோக் போன்றோர். பொறுப்பேற்றிருகின்றனர் 14 ஆண் குழந்தைகளும் 13 பெண் குழந்தைகளும் பயனடைந்து வருகின்றனர்

திறந்த வெளியில் பாடம் கற்று தருவது சிறந்ததொரு அனுபவமாக இருக்கின்றது. என தொண்டர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர். சீடு அண்ணன்கள் பாடம் கற்று தருவதால் எங்கள் பள்ளி பாடங்கள் எளிமையாக உள்ளன என்று குழந்தைகள் நன்றி தெரிவித்துள்ளனர். பெற்றோர்களின் கோரிக்கையை நிறைவேற்றிய நமக்கு மனநிறைவாக இருக்கிறது.

O.மோகன்
குழந்தைகள் திட்ட ஒருங்கிணைப்பாளர்

# உணவுத் திருவிழா

இன்று மாலை 6.30 மணியளவில் கரும்பாலை கிழக்கு தெருவில் மதுரை சீடு சார்பாக உணவுதிருவிழா நடைபெற்றது. 12ஆம் வகுப்பிலிருந்து 12ஆம் வகுப்பு வரை 12 ஸ்டால்களும், பிறகு பெண் தொண்டர்கள் சார்பாக 1 ஸ்டாலும், பணியாளர்கள் சார்பாக உணவு மற்றும் விலை பட்டியல்

| வகுப்பு | உணவு | விலை | பொறுப்பாளர் |
|---|---|---|---|
| 1 | கேப்பை புட்டு | ரூ.1 | அழகிரி |
| 2 | கேசரி | ரூ.1 | மணிகண்டன் |
| 3 | சப்பாத்தி | ரூ.2 | பைசர்கான் |
| 4 | மட்டன்சூப் | ரூ.2 | சுல்தான் |
| 5 | நிலக்கடலை | ரூ.1 | முனியசாமி |
| 6 | பிரட்ரோஸ்ட் | ரூ.2 | பாண்டியராஜன் |
| 7 | பால்கொழுக்கட்டை | ரூ.1 | மோகன் |
| 8 | முள்முருங்கைவடை | ரூ.1 | மகுடபதி |
| 9 | அரிசிபுட்டு | ரூ.2 | சரண்யா |
| 10 | காலிபிளவர்பஜ்ஜி | ரூ.2 | முத்துப்பாண்டி |
| 11 | வாழைக்காய்பஜ்ஜி | ரூ.2 | கற்பகசெல்வி |
| 12 | தோசை | ரூ.2 | ராமச்சந்திரன் |
| பெண்தொண்டர்கள் | சேமியாகேசரி | ரூ.2 | அமுதா |
| பணியாளர் | பணியாரம் | 50 காசுகள் | சரண்யா |

உணவுத்திருவிழாவில் சிறப்பு விருந்தினராக ராஜம் இன்போசிஸ் ஆசிரியை.செல்விசரண்யா அவர்கள் கலந்து கொண்டார்கள். அனைத்து ஸ்டால்களுக்கும் சென்று உணவை சுவைத்து மகிழ்ந்தார். சுவையில் முதலிடம் 5ஆம் வகுப்பும், 10ஆம் வகுப்பும் பெற்றனர். குழந்தைகளின் சமையல் திறமையை கண்டு ரசித்தனர் .இறுதியில் விற்பனையில் முதலிடத்தை 11 ஆம் வகுப்பும், இரண்டாமிடத்தை 8 ஆம் வகுப்பும், மூன்றாமிடத்தை 10 ஆம் வகுப்பும் பெற்றனர்.

மன்சூர் அலி
இயக்குனர்
மதுரை சீடு

# Holidays Activities Report 2009-2010

For Madurai Seed children and young people this half yearly holidays from 24.12.09 to 3.1.10 become unforgettable and useful days. Along with the special plans Christmas, Margazhi Urchavam (Annual Meeting of Madurai Seed Children and Young People), New Year celebrations and Special guests of various sectors made those days very momentous. Activities are planned separately for Vandugal Arangam. Vergal Arangam, Kanavugal Arangam.

**VANDUGAL CAMP** *From 26.12.09to30.12.09*

For Vandugal Arangam children the camp gave various exposures, experiences, trainings and cheerfulness. At the inauguration Mr. Yuvaraj, a Student of the American College Tamil department participated as a special guest and inaugurated the camp.

At the very first day volunteers taught some songs those were prepared by their selves. Also the children were encouraged to write songs by own in groups. It is very delight to listen songs in their lisp voice.

At the second day they are introduced a folk dance namely Thevarattam. They learnt some steps with the direction of the volunteers.

At the third day with the help and supervision of the volunteers children cooked some dishes. Children brought groceries from their house. It is very wonderful to see the team sprit, work in those kids.

Fourth day they learnt to make masks. With pieces of papers, glue, water they applied those things in the faces of other children, balloons. They get the impression of the things. After coloring, they had the masks like man, lion, elephant, etc.

Firth day they preformed a fashion show. Children were decorated with colourful dresses, flowers, leafs, papers. They all looked very beautiful and smart.

At the closing ceremony of the Vandugal camp Mr.Kani student from Sociology department of the American collage joined with them as a guest and things what they learnt in the camp.

Also On 25.12.09,01.01.10,02.01.10 sports meet was conducted for the children. Volunteers conducted number of events. Prizes were given to the winner children.

This Vandugal Camp and Sports Meet was facilitated by the Managing Trustee A.S.Karthik Bharathi, Director Mansur Ali and coordinated and executed Thangalakshmi, and Karpga Jothi.

60 children participated in the camp and get benfited.

**TAEKWONDO CAMP** *From 26.12.09to30.12.09*

For Vergal Arangam Children Teakwonda a martial art was taught by the Volunteer Radha Krishnan also Taekwonda Coacher. The camp was inaugurated by the Skating & Table Tennis Coacher Mr.Raja and Business man Mr.Mani. Children learnt basic techniques, blocking techniques, attacking techniques. Children are grouped and gave coaching. They were given marks for their discipline, practical performance. At the closing ceremony business men Mr.Mathiazagan, Mr. Venkadesh, Mr.Mani distributed prizes to the winner team. A demonstration of children took place. Sophia, Buvaneshwaran of seventh standard broke tiles.

This Taekwonda Camp was facilitated by the Managing Trustee A.S.Karthik Bharathi, Director MansurAli and coordinated and executed by Voluntreer Coacher Radhakrishnan, Volunteers O.Mohan, S.Murugapandi, and N.Ramachandren.

**CHRISTMAS DAY CELEBRATION**

In Madurai Seed Christmas day was celebrated on 24.12.09. Social workers Mr.Joshua Samuel Jebaraj and Mr.Ramakrishnan worked in an organization for empowering AIDS patients joined with us as special guessts. Muthuganesh of 8th standard gave news about Xmas. Cultural events were given by Vandugal, Vergal, Kanavugal Arangam children and Thedalga Young People.

Guestsgave their Christmas wishes and speak to the children. Jamesof 7th standard adorned

given by Vandugal, Vergal, Kanavugal Arangam children and Thedalga Young People.

Guestsgave their Christmas wishes and speak to the children. Jamesof 7th standard adorned like Santa Clause and gave sweets to the children.

**AWARNESS CAMP ABOUT ANNULAR SOLAR ECLIPSE IN**

After a very long period of 108 years, annular solar eclips is going to happen on 15th, January 2010 in Tamil Nadu. An explanation and awareness meeting was held on in MADURAI SEEDon Saturday 26th December, 2009 In this conference an informative flim concerned with this topic has been seen. Two resource people has come and revealed the blind beliefs, myths about the Solar Annular eclipse and the procession of the eclips and the procession of the eclips and the way to look this eclipse. The Two people were Mr.Sathya Manickam from Madurai Galileo Science Center and Kodaikanal Theresa Women's university Lecturer Mrs. Devi. The doubts of the listeners has been revealed and cleared. Hundreds of Children and youth in Karumbalai have the fruits of thes conference has been prepared by MADURAI SEED Trustees A.SKarthik Bharathi and K.Anbarasan and Director Mr.Mansurali .

**MARGAZHI URCHAVAM**



*Annual meeting of Madurai Seed children and young people*

This year Madurai SEED Margazhi Urchavam was celebrated on 27th December 2009. This time for a change and a new mien we conduct a Rangoli Contest for mood. The Postures and decorations saying the Rangoli Competition were spreading the news of competion among the people through mildes. Children and young people added the celebration med by their traditioanl dresses. Vandugal Arangam children disguised as Krishna. Radha and Aandal and were contiuuing their procession. Evening 4'o clock it self all streets of Karumbalai became luminous with the Rangoli in hte entrance of each house. Nearly 40 Rangoli were made in very splendorous manners. Our Managing Trustee A.S.Karthik Bharathi Financial Trustee K.Anbarasan, Director Mr.Mansurali valued the Rangoli were created with a lost of concentraion, hard work 5 first prizes for each sstreet has been given. They are chithra-East Street, Valarmathi-South Street, Murugammal - Middle Street, Amala-North Street, and Muthumari-S.M.Nagar. The first prize Rs. 500 has been divided as Rs. 100 among each people. Besides that consolation prizes have been to all participants with sweets and a Rangoli print.

**Film Projections**

During the holiday evening Children's favortie Tamil and English Movies were projected at Kanavugal Arangam. Discussions about the films were also conducted.

On 25.12.2009 the film "2010" has been projected. The theme of the film is about the destruction of the Earth, which was very much admirable to children. Children were amazed by the Graphic Scenes in the movie with much interest .

On27.12.2009 "Pirates of the Caribbean" has been Projected. As the film is about the pirates, the stunt scenes and Humor scenes impressed the children.

On 28.12.2009 " Lord of the Rings" has been projected.

On 03.01.2010 "Around 110 children and young people went to a near by theatre and watched the movie "Avatar", which is a film from the Oscar winning Director James Cameroon. Many children were being a novel experiences to go to theatres and watch a film.

**Vanmugail Cultural Fest 2009**

This Year Vanmugail Cultural Festival is presented in the hotel METROPOL, near District Court. The Theme is "Tamilnadu Pongal Festival".

Volunteer Arun Kumar presented on "Folk Deities and Pongal similarly Volunteer Karapaga Jothi presented on "Flod Deties and Pongal Festival".

By the training of Volunteers Mohan, Muniya Samy, Muruga Pandi and Baskar Raja children gave their magnificent dances. More than 80 children and young people had participoated in thes festival.

Students from Isenberg School of Business and Massacutes Universityu had particapated and knew about our folk arts an festivals. They also had sweetest delicious pongal.

**CONTINUOUS NEW YEAR CELEBRATIONS**

From 31st December 2009 to 3rd January 2010

Celebration of New Year and inaugration of Madurai Seeds second decade, altogether were celebrated continuously for 4 days.

On 31.12.2009 Advocates Mr.Karumalai Rajan, Mr.Viswanathan took part in New Year Eve Celebration and gave their New Year message to children and young people of Madurai Seed. The captivating performance f our Vandugal Arangam children like dances and songs were admired by all. Vergal Arangam children gave their stunning performance in 3 dances. Chief guests sponsored New Year sweets to the children.

On 01.01.2010 at Kanavugal Arangam Children and Young people conducted a debate on the topic " The delights and Difficulties of 2009" a program of reminiscence of the last year.

On 02.01.2010 Professor. Raaji of Coimbatore N.G.M.College Environmental Science Department gave her golden presence with her friends. She wishes the children and speak for especially for the women's empowerment. The children and young people are impressed by her life and speach.

On 03.01.2010 the Director of Chella Meenakshi Trust Mrs. Vidya and Mr.Joseph Elder, the Professor and Research Scholar of Wisconsin University, USA Came to Madurai Seed said their New Year wishes and gotdelight by interacting with the children and young people.

Vidya and Raja Sekar of Chella Meenakashi Center, Eshwar Iyer, the head of Management studies and Our Managing Trustee Karthik Bharathi, Financial Trustee Anbarasan, Director Mansur Ali had also participated and facilitated the Vanmugil Cultural Fest 2009 of Madurai Seed.

**MADURAI SEED INSTITUTION DAY**

February 21, 2010

Madurai Seed works for children and young people for 8 years ion Madurai with the hard and cooperative works of amazing volunteers has become a registered Institution in February 2007. On Memory of the day MADURAI SEED children and young people has celebrated the Institution day for the past 3 years.

On 17.02.2008. it was celebrated in Gandhi Museum, 1.02.2009 in MADURAI SEED Kanavugal Arangam, This year we celebrated in Gandho Museum.

On that day, Children and young people has come to Gandhi Museum (Kumarappa Kudil) in charming colorful dresses. Dr.Laura Villger, president of Friends of MADURAI SEED hoseted the flag before. The Song has sung by children with the meaning of "Grow with MADURAI SEED hoisted the flag before. The song has sung by children with the meaning of "Grow with MADURAI SEED, Give helping hands to others".

Mrs. Elavarasi gave Welcome address, Compering by C.Arun Kumar and C.Karapagajothi, Director. Masur Ali gave thanking address.

40 young people and more than 250 children have participated in this celebration. They are provided with tea and snack. 80 children gave their dance performances for songs which told the greatness of Tamil culture. Volunteers Mohan, Murga pandi, Baskar Raja, Muniya Samy, trainers who compose are honed.

This celebration become a family festival full of joyfulness. The event of gifting KFR School's donation shows the compassion of the both children in social changes.

# சமச்சீர்க்கல்வி



ஒரு கோடிக் குடும்பங்களின் பிரச்சனை இது! 'சமச்சீர்க் கல்வி'.

வரும் கல்வி ஆண்டு முதல் பள்ளிகள் அனைத்தும் சமச்சீர்க் கல்வியை நோக்கிய தனது பயணத்தைத் தொடங்கப்போகின்றன. அரசு நடத்தும் மாநிலப் பள்ளிகள், மெட்ரிகுலேசன் பள்ளிகள், ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள், ஓரியண்டல் பள்ளிகள்... எனத் தமிழகத்தில் நான்குவிதமான கல்வி நிறுவனங்கள் செயல்படுகின்றன. சி.பி.எஸ்.சி. பள்ளிகள் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் வருபவை. மேற்சொன்ன நான்கு விதமான கல்வி முறைப்படி படிக்கும் பிள்ளைகள் பத்தாம் வகுப்பையோ அல்லது பன்னிரெண்டாம் வகுப்பையோ எட்டும்போது, வெவ்வேறு தேர்வுகளில் தேர்ச்சி பெற்றாலும் கடைசியில் ஒரே மாதிரியான மதிப்பெண் வரையறைப்படியே உயர் கல்வியை அடைய வேண்டியுள்ளது. கல்விமுறையில் இருக்கும் சமத்துவமின்மையைத் தவிர்ப்பதற்காக அனைவருக்கும் ஒரே மாதிரியான பாடத் திட்டம் வேண்டும் என்று கல்வியாளர்கள் வலியுறுத்தி வந்தார்கள். இதுபற்றி ஆராய அமைக்கப்பட்ட முத்துக்குமரன் கமிஷனும் இதை ஏற்றுக் கொண்டது. இதைத் தொடர்ந்து, ஒன்று மற்றும் ஆறு ஆகிய இரண்டு வகுப்புகளுக்கான பாடங்கள் மட்டும் வரும் கல்வி ஆண்டில் அனைத்துப் பிள்ளைகளுக்கும் ஒரே மாதிரி இருக்கப் போகின்றன. அதற்கடுத்த கல்வி ஆண்டில் (2011-12) அனைத்து வகுப்புகளுக்கும் பாடப் புத்தகங்கள் ஒரே மாதிரி ஆகிவிடும்.

'சமச்சீர்க் கல்வியை ஏற்கிறோம். ஆனால், இப்போது கொண்டுவரப்படுவது சமச்சீர் பாடத் திட்டம்தானே தவிர, சமச்சீர்க் கல்வி அல்ல. எல்லாப் பிள்ளைகளும் ஒரே மாதிரியான பாடத் திட்டத்தில் படிப்பது என்பது வேறு. ஒரே மாதிரியான வசதிகள் கொண்ட கல்விக் கட்டமைப்புக்குள் படிப்பது என்பது வேறு. மெட்ரிக் பள்ளி மாணவர்கள் தரமான கட்டடத்தில், போதிய சோதனைச் சாலை மற்றும் நூலக வசதிகளுடன் படிப்பார்கள். அரசு பள்ளி மாணவர்கள் மரத்தடியில், ஓட்டுப் பள்ளிகளில் வேறெந்த வசதியும் இல்லாமல் அதே பாடங்களைப் படிப்பார்கள் என்றால்... இது எப்படி சமச்சீர்க் கல்வி ஆகும்? சமச்சீர்க் கல்விக்கான பாடத்திட்டத்தை நகரத்துப் பிள்ளைகளை மனதில்கொண்டே தயாரிக்கிறார்கள். கிராமப் பிள்ளைகளை கவனத்தில் எடுக்கவில்லை. ஏ.எஸ்.இ.ஆர். சமீபத்தில் எடுத்த ஆய்வின்படி கிராமப் பள்ளியில், ஐந்தாம் வகுப்பு படிக்கும் பிள்ளைக்கு இரண்டாம் வகுப்புப் புத்தகத்தைக்கூட பிழையில்லாமல் வாசிக்கத் தெரியவில்லை என்கிறது. "

கல்வித்துறைக்கு மாநில மாநில பட்ஜெட்டில் தேவையான நிதி ஒதுக்குவது இல்லை. அனைத்துப் பள்ளிகளுக்கும் சேர்த்து ஐந்து லட்சம் ஆசிரியர்கள் இருக்க வேண்டும். ஆனால், இரண்டேகால் லட்சம் ஆசிரியர்கள்தான் இருக்கிறார்கள். தாய்மொழி வழி கல்விதான் அறிவியல் பூர்வமானது என்று அறிஞர்கள் சொல்கிறார்கள். ஆனால், எல்லா இடங்களிலும் ஆங்கிலம்தான் அதிகம் இருக்கிறது. தமிழ், ஆங்கிலம் என்று இருக்கும் இரட்டைக் கல்வி முறையை எப்போது மாற்றப்போகிறார்கள்? .

நான்கு விதமான கல்விவாரிய முறைகள் தமிழகத்தில் இருக்கின்றன. 85 சதவிகித மாணவர்கள் மாநிலக் கல்வியில் பயின்றாலும், கல்விமுறையில் வேற்றுமை இருந்தது. இதற்கு முக்கியமான காரணமாக பாடத் திட்டங்கள்தான் இருந்தன. இதனால் , அவர்களை தட்டில் வைத்து உயர் படிப்புக்குத் தேர்வு செய்வதிலும் சமத்துவம் இல்லை. எனவேதான் முதல் கட்டமாக பாடத்திட்டத்தைப் சமப்படுத்த நினைக்கிறார்கள். இது முதல்கட்டம் மட்டும்தான். அரசின் கனவான இச்சமநிலைக் கல்வியை ஒரேநாள் காலையில் முழுமையாக உருவாக்கி, அமல்படுத்திட முடியாது. ஒவ்வொரு கட்டமாகத் தான் செய்ய முடியும். பணக்காரர்கள் படிப்பது மெட்ரிக் பாடம், ஏழைகளுக்கு தமிழ்நாடு அரசின் பாடப்புத்தக்ங்கள் என்ற வேறுபாடு இருப்பதை மாற்றுவதில்தான் இந்தத் துவக்கம் உள்ளது. ஏழையோ, பணக்காரரோ, வசதியான பள்ளியோ, வசதி குறைந்த பள்ளியோ, படிப்பது ஒரே பாடமாகத்தான் இருக்கவேண்டும் என்பது இந்த திட்டத்தின் நோக்கம்.

கல்வியின் தரத்தில் தேவை 'மாற்றம்' என்பதில் யாருக்கும் மாறுபட்ட கருத்து இல்லை. அந்த மாற்றத்தைச் செய்கையில் 'தடுமாற்றம்' ஏதுமின்றி, தெளிவான கண்ணோட்டம் வேண்டும் என்பதே எல்லோரின் எதிர்பார்ப்பு.

நன்றி: ஆனந்தவிகடன்

## மதுரை சீடுநடவடிக்கைகள்
## ஆகஸ்ட் 2009

1.8.09: காலை: அறுந்தவால் நாடக பயிற்சி
மதியம்: உள்ளரங்க விளையாட்டுகள்

2.8.09: வாண்டுகள், வேர்கள், அரங்க குழந்தைகள் இராஜாஜி சிறுவர் பூங்காவிற்கு சென்று வந்தனர். தொண்டர்களால் குழந்தைகளுக்கு பல்வேறு விளையாட்டுகள் நடத்தப்பட்டன. சிறுவர்கள், ரோப்கார், இரயில் இராட்டினங்களில் சென்று மகிழ்ந்தனர்.

4.8.09: ஜெய்ஹிந்த்புரம், விடியல் நிறுவனத்தில் நடைபெற்ற FPCP மாவட்ட கூட்டத்தில் மதுரை சீடு இயக்குனர் மன்சூர் அலி கலந்து கொண்டார்.

5.8.09: காந்திநகர் சிநேகம் முதியோர் இல்லத்திற்கு மதுரை சீடு சார்பாக மதிய உணவு, இரவு உணவு வழங்கப்பட்டது அறங்காவலர்கள் கார்த்திக் பாரதி, அன்பரசன், இயக்குனர் மன்சூர் அலி மற்றும் தொண்டர்கள் பங்கேற்றனர்.

7.8.09: தொண்டர் பாஸ்கர் பழகுநர் உரிமம் பெறுவதற்குரிய வழிகாட்டல்கள், உதவிகள் வழங்கப்பட்டன.
தல்லாகுளம், செங்குந்தர் பள்ளியில் 6–10 வகுப்பில் முதல் மதிப்பெண் பெற்றவர்களுக்கு புதுயுகம் இதழ்கள் வழங்கப்பட்டன.

8.9.09: வாண்டுகள், வேர்கள், கனவுகள், அரங்க குழந்தைகளுக்கு உள்ளரங்க வெளியரங்க விளையாட்டுப் போட்டிகள் நடத்தப் பெற்றன .

9.9.09: காந்திநகர் சிநேகம் முதியோர் இல்லத்தின் முன்புறம், பின்புறம் தூய்மை செய்யும் பணிகளை மதுரை சீடு இளைஞர்கள் மேற்கொண்டனர்.

10.9.09: சுவிட்சர்லாந்து நண்பர் பெபினா மற்றும் அவரது நண்பர்கள் 11 பேர் மதுரை சீடு அரங்கங்களை பார்வையிட்டனர் 1 முதல் 12ஆம் வகுப்பு வரை உள்ள குழந்தைகள் ஒவ்வொருவரிடமும் தனித்தனியே உரையாடினர். குழந்தைகள் கலைநிகழ்ச்சிகளை வழங்கினர்.

11.8.09. மதுரை சீடு செந்தமிழ் நூலகத்திற்கு Honey well நிறுவனம் Water purifier வழங்கியது. கரும்பாலையில் தூய்மையான குடிநீர் கிடைக்காத சூழலில் மதுரை சிடு குழந்தைகள், இளைஞர்களுக்கு இது ஒரு வரப் பிரசாதம் குழந்தைகள், இளைஞர்களுக்கு இந்த செயல்படும் விதத்தை பற்றி செயல்முறை விளக்க வகுப்புகள் நடத்தப் பெற்றன.

12.8.09: பன்றிக்காய்ச்சல் குறித்து அறிவியல் பூர்வமான செய்திகளையும், மருத்துவ முறை, பரவும் விதம், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து MSCF தலைவர் மாணிக்கராஜா உரையாற்றினார்.
மைக்கேல் ஜாக்சனை நினைவு கூறும் விதமாக அவரின் வரலாறு பற்றி பாண்டியராஜன் அவர்கள் எடுத்துக் கூறினார். மைக்கேல் ஜாக்சனின் புகழ்மிக்க பாப் ஆல்பங்கள் திரையிடப்பட்டன.

13.8.09: நீதி அறங்காவலர் அன்பரசனுடன், தொண்டர் பைசர் நிலக்கோட்டை ASPIRE குழந்தைகள் நிறுவனத்திற்கு சென்று பார்வையிட்டு வந்தார்.

14.8.09. தொண்டர்கள், முருகபாண்டி, சுல்தான், மருதுபாண்டி ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கான LLRபெற்றனர் மதுரை சீடு ஆல் வழிகாட்டுதல்கள், உதவிகள், வழங்கப்பட்டன.
மாலை குழந்தைகளுக்கு இயற்கை உணவான கூழ் சமைக்கப்பட்டு வழங்கப்பட்டது.

15.8.09. இந்திய சுதந்திர தினம் நிகழ்ச்சி அலுவலகம் முன்பு காலை 7.00 மணிக்கு கொண்டாடப்பட்டது. இயக்குனர் மன்சூர்அலி தேசியக் கொடியேற்றி, சுதந்திர தின செய்தி வழங்கினார். குழந்தைகளுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.
அறங்காவலர்கள், கார்த்திக் பாரதி, அன்பரசன், இயக்குனர் மன்சூர் அலி, தொண்டர்கள் அருண்குமார், முருகபாண்டி ஆயுதப்படை மைதானத்தில் மாவட்ட நிர்வாகம் சார்பாக நடைபெற்ற சுதந்திர தினத்தில் கலந்து கெண்டனர்.
தொண்டர் மாரிமுத்து மதுரை காமராஜர் பல்கலைகழக சுதந்திர தின அணிவகுப்பில் கலந்து கொண்டார்.
மாலை சிநேகம் முதியோர் இல்லத்தில் குழந்தைகள் கலைநிகழ்ச்சிகள் வழங்கினார்கள்.

18.8.09: இளைஞர் அருண்குமாருக்கு சேமிப்புக் கணக்கு IOBஇல் தொடங்கிட மதுரை சீடு ஆல் வழிகாட்டல்கள், உதவிகள் வழங்கப்பட்டன.

20.8.09: திண்டுக்கல் அனுகிரஹா தொண்டு நிறுவனத்தில் மாநில FPCP மண்டல கூட்டம் நடைபெற்றது மதுரை சீடு இயக்குநர் மன்சூர் அலி கலந்து கொண்டார்.

21.8.09: சுவிஸ் ஆதரவாளர் தாரணியுடன் ஸ்கைப் மூலம் குழந்தைகள் இளைஞர்கள் கலந்துரையாடினர்.

22.8.09 காலை குழந்தைகளுக்கான வினாடி வினா நிகழ்ச்சியை கார்த்திக்பாரதி அண்ணன் வழிநடத்தினார். இளைஞர்களுக்கான தேர்வு பயிற்சி வகுப்பை தொண்டர் முருகபாண்டி வழிநடத்தினார்.

28.8.09 காலை மையத்தில் பிஜு அவர்களுடன் கார்த்திக்பாரதி அண்ணன், மன்சூர் அலி கலந்துரையாடினர்.

29.8.09 FCMRP மாவட்டக் கூட்டம் மதுரை சீடு கனவுகள் அரங்கத்தில் நடைபெற்றது. மாநிலத் தலைவி உத்ரா கூட்டத்தை வழிநடத்தினார். மதுரை சீடு புதிய உறுப்பினராக விக்னேஷ்வரன் தேர்ந்தெடுக்கப்பட்டார். மதியம் நிதி அறங்காவலர் அன்பரசன் தலைமையில் சுற்றுச்சூழல் பற்றி கலந்துரையாடல் நடைபெற்றது. பீசீடு, பாவர்டு, விடியல், சக்தி மகளிர், மதுரை சீடு நிறுவனங்களின் குழந்தைகள் பங்கேற்றனர்.
காலை தொண்டர்களுக்கு VAO தேர்வு பயிற்சி வகுப்பை தொண்டர் முருகபாண்டி வழிநடத்தினார்.
(மாலை சீடு ஆதரவாளர் பாரிவேனேசன் திருமண நிச்சயதார்த்தத்தில் குழந்தைகள், இளைஞர்கள் பங்கேற்று கலைநிகழ்ச்சிகள் வழங்கினார்கள்.)

30.8.09 சீடு ஆதரவாளர், பாரிவேனேசன் இல்லத் திருமண விழாவில் மதுரை சீடு இளைஞர்கள் பங்கு கொண்டனர்.

31.8.09 மாலை வான்டுகள் அரங்க குழந்தைகள் மதுரை 4வது புத்தகத் திருவிழாவினை பார்வையிட்டும், புத்தகங்களை வாங்கியும் மகிழ்ந்தனர்

## செப்டம்பர் 2009

1.9.09: இளைஞர் P.மணிகண்டனுக்கு அமெரிக்கன் கல்லூரி தமிழிலக்கிய பிரிவில் இடம் கிடைக்க மதுரை சீடு ஆல் வழிகாட்டல்களும், உதவிகளும் வழங்கப்பட்டன. கனவுகள் அரங்க குழந்தைகள், மதுரை புத்தகக் கண்காட்சியில் பங்கேற்று பயன் பெற்றனர்.

5.9.09: இன்று ஆசிரியர் தினம் ஆசிரிய தொண்டர்கள் அனைவருக்கும் ஆசிரிய தின வாழ்த்துகளை குழந்தைகள் தெரிவித்தனர் மாலை கனவுகள் அரங்கத்தில் சுந்தர ராமசாமியின் எங்கள் டீச்சர் சிறுகதை வாசிக்கப்பட்டு, விவாதிக்கப்பட்டது.
வழிநடத்தியவர்: அ.ச.கார்த்திக் பாரதி

6.9.09, 13.9.09, 20.9.09, 27.9.09
கனவுகள் அரங்கத்தில் தொண்டர் ராதாகிருஷ்ணனின் விடுமுறை நாள் சிறப்பு வகுப்புகள் நடைபெற்றன. குழந்தைகளுக்கு புதிய விளையாட்டுகள், பாடல்கள் கற்றுத்தரப்பட்டன.

9.9.09: (மதுரை சீடு ஆதரவாளர்கள் பாரிவேனேசன், கலைச்செல்வி மற்றும் குடும்பத்தினருக்காக கார்த்திக் பாரதி இல்லத்தில் நடைபெற்ற விருந்தில் சீடு குழந்தைகள், இளைஞர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அறுசுவை விருந்தை அனைவரும் உண்டு மகிழ்ந்தனர்.)

12.9.09: நிர்வாக அறங்காவலர் கார்த்திக் பாரதி, இளைஞர் ஒருங்கிணைப்பாளர் அருண்குமார் செந்துறை நம்மவீடு மாண்டிச்சோரி பள்ளியை பார்வையிட்டனர், பள்ளி ஆசிரியர்கள் மாண்டிச்சோரி கல்விமுறை குறித்தும், பாடத்திட்டம் குறித்தும் விளக்கினர்.

13.9.09 தேடல்கள் அரங்கத்தில் இளைஞர்களுக்கான VAO தேர்வு பயிற்சி வகுப்புகள் தொண்டர் முருகபாண்டி தலைமையில் நடைபெற்றது .

13.9.09: குழந்தைகள் காலாண்டுத் தேர்வுக்கு தயாரிப்பு வேலைகளில் ஈடுபட்டனர்.

14.9.09லிருந்து 24.9.09 வரை காலாண்டுத் தேர்வுகள்

17.9.09: இளைஞர் அசோக் கல்லூரி கேரளா கல்வி சுற்றுலாவில் பங்கேற்றார்.

19.9.09, 26.9.09, 27.9.09
தேடல்கள் அரங்கத்தில் இளைஞர்களுக்கான VAO தேர்வு பயிற்சி வகுப்புகள் தொண்டர் முருகபாண்டி தலைமையில் நடைபெற்றது

20.9.09: இன்று ரம்ஜான் கொண்டாட்டத்திற்கான தயாரிப்பு வேலைகளில் அனைவரும் ஈடுபட்டனர்.
சிநேகம் முதியோர் இல்லத்தில் இளைஞர்கள் தூய்மை செய்யும் பணியில் ஈடுபட்டனர்.

21.9.09: மாலை சிநேகம் முதியோர் இல்லத்தில் உலக அமைதி நாள், ரம்ஜான் கொண்டாட்டங்கள் நடைபெற்றன. மதுரைசீடு குழந்தைகள், இளைஞர்கள், திரளாக விழாவில் கலந்து கொண்டனர், குழந்தைகளின் பல்சுவை கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.)

22.9.09: நிர்வாக அறங்காவலர் கார்த்திக்பாரதி அவர்களின் பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. தொண்டர்கள் அனைவருக்கும் இரவு உணவு அளிக்கப்பட்டது.

23.9.09: செந்துறை நம்மவீடு மாண்டிசோரி பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாதேஷ் அவர்கள் மதுரைசீடு கல்வி மையங்களைப் பார்வையிட்டனர். குழந்தைகள், இளைஞர்களிடம் உரையாடி மகிழ்ந்தனர்.

24.9.09 மாலை நாடோடிகள் திரைப்படம் திரையிடப்பட்டது.

25.9.09, 26.9.09, 27.9.09
பெருங்குடி RTIயில் நடைபெற்ற FCMRP முகாமில் தென்மண்டல பிரதிநிதி முத்துகணேஷ் கலந்து கொண்டார்.

25.9.09: நிர்வாக அறங்காவலர் கார்த்திக்பாரதி, நிதி அறங்காவலர் அன்பரசன், இயக்குனர் மன்சூர்அலி தலைமையில் இளைஞர்கள் செந்துறை நம்மவீடு மாண்டிச்சோரி பள்ளியை பார்வையிட்டு குழந்தைகளிடம் உரையாடி மகிழ்ந்தனர்.

26.9.09: இளைஞர்களும், குழந்தைகளும் சுல்தான் அலாவுதீன் தலைமையில் எவிடன்ஸ் அமைப்பு நடத்திய மாநில அளவிலான கொத்தடிமை தொழிலாளர்களும், சட்ட நடவடிக்கைகளும் என்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.
தெற்குமாசி வீதியை சேர்ந்த கௌதம், மணி என்ற குழந்தைகளின் சேகரிப்பான பொம்மைகளை கொண்டு நவராத்திரி, கொலு நிகழ்ச்சி நடைபெற்றது.

27.9.09: மாலை கனவுகள் அரங்கத்தில் CENTER OF THE EARTH என்ற திரைப்படம் திரையிடப்பட்டது.

28.9.09: காலை இயக்குனர் மன்சூர்அலி குழந்தைகள், இளைஞர்கள் ஒத்தகடை நரசிங்கம் கிராமத்திற்கு சென்று வந்தனர். அங்குள்ள பாண்டியர் கால கோயில் குடைவரைக்கோயில்,சமணர்படுக்கை, கல்வெட்டுகளை கண்டு மகிழ்ந்தனர். உணவு திருவிழாவிற்கான வேலைகள் நடைபெற்றன. இளைஞர்களுக்கு ஆங்கில வகுப்புகள் நடைபெற்றது.

29.9.09: காலை குழந்தைகளுக்கான படைப்பரங்க வகுப்புகள் நடைபெற்றன.
மதியம் உணவுத்திருவிழாவிற்கான தயாரிப்பு வேலைகள் நடைபெற்றன. மாலை வெகு விமர்சையாக உணவுத்திருவிழா நடைபெற்றது. முதல் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை 12 அரங்கங்களும், கல்லூரி ஆண் தொண்டர்கள், பெண் தொண்டர்கள் பணியாளர்கள் என்ற வகைகளில் நடைபெற்ற 15 உணவு அரங்கங்களும் நிஜ வியாபார தளங்களாக விளங்கின.

30.9.09 காலை குழந்தைகள் மதுரை ஆவின் பால் பண்ணைக்கு இளைஞர் சிவகுருநாதன் தலைமையில் பார்வையிட்டு மகிழ்ந்தனர்.

## அக்டோபர் 2009

1.10.09: தொண்டர் கற்பக ஜோதி இளைஞர்களுக்கான ஆங்கில பயிற்சி வகுப்பினை நடத்தினார்.

2.10.09: இயக்குனர் மன்சூர் அலி தலைமையில் தொண்டர்கள் குழந்தைகள் அழகர் கோயில் சுற்றுலா சென்று வந்தனர் நிர்வாக அறங்காவலர் கார்த்திக் பாரதி தலைமையில் தொண்டர்கள் செந்துறை நம்மவீடு மாண்டிசோரி பள்ளியை மூன்றாவது முறையாக பார்வையிட்டனர்.

3.10.09: சுவிட்சர்லாந்து சீடு ஆதரவாளர் தாரணி மதுரைக்கு விஜயம் செய்தார்.

4.10.09, 11.10.09, 18.10.09, 25.10.09: தொண்டர் இராதாகிருஷ்ணன் வேர்கள் அரங்க குழந்தைகளுக்கு விடுமுறை கால சிறப்பு வகுப்புகளை நடத்தினார். கைரேகையில் கைவண்ணம் விளையாட்டு, பாடல்கள், நடனம் போன்ற தலைப்புகளில் வகுப்புகள் நடந்தன.

5.10.09: நண்பர் திரு.முத்துக்குமார் கனவுகள் அரங்க குழந்தைகளிடேயே மனித உரிமைகள் என்ற தலைப்பில் உரையாற்றினார்

6.10.09: புதுயுகம் இதழ் மதுரை சீடு குழந்தைகளிடையே விநியோகிக்கப்பட்டன.

7.10.09: சுவிஸ் நண்பர்கள் தாரணி, அனிடா, ஈவ்லின், மதுரை சீடு மையங்களை பார்வையிட்டு குழந்தைகள் இளைஞர்களிடேயே உரையாடினர்.

10.10.09: எவிடன்ஸ் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த கலந்துரையாடல் கூட்டத்தில் நிர்வாக அறங்காவலர் கார்த்திக் பாரதி கலந்து கொண்டார்

11.10.09 இளைஞர்களுக்கான ஆசிரியர் பயிற்சி முகாம் நார்த்கேட் ஹோட்டலில் சுவிஸ்

12.10.09: ஆதரவாளர் தாரணி தலைமையில் நடைபெற்றது.

14.10.09: ஆதராவளர் தாரணி குழந்தைகள், இளைஞர்களிடம் விடைபெற்று ஊர் திரும்பினார் தீபாவளிக் கொண்டாட்டங்கள் பற்றி தொண்டர் கூட்டத்தில் பேசப்பட்டது.

15.10.09: மதுரை – சீடு கனவுகள் அரங்கத்தில் தீபாவளி கொண்டாடப்பட்டது. அனைத்து வகுப்பினருக்கும் தனித்தனியே விளையாட்டு போட்டிகள் நடத்த பெற்றன பட்டாசு வெடித்து இனிப்புகள் வழங்கி அனைவரும் தீபாவளியை கொண்டாடினர்.

NEW INDIAN EXPRESS நாளிதழ் ஆங்கில ஆசிரியருக்கான பயிற்சி முகாம் குறித்த செய்தியினை வெளியிட்டிருந்தது.

17.10.09: இன்று தீபாவளி. மதுரை சீடு இல் அனைவரும் இனிப்புகள் வழங்கி தங்களுக்கு வாழ்த்துகளை பரிமாறிக்கொண்டனர்

மதுரை-சீடு நண்பர் மத்திய அரசு அலுவலர் சுரேஷ்குமார் குழந்தைகளுடன் தீபாவளி கொண்டாடினார்.

தினமணி நாளிதழ் ஆங்கில ஆசிரியருக்கான பயிற்சி முகாம் குறித்து செய்தி வெளியிட்டிருந்தது.

25.10.09: ஆறு மாத கால மதுரை-சீடு நடவடிக்கைகள் பற்றிய அறிக்கை தயாரிக்கும் பணிகள் நடைபெற்றன.

31.10.09: முத்து கணேஷ் ஸ்ரீ வில்லிபுத்தூர் FCMRP மண்டலக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

## நவம்பர் 2009

1.11.09, 8.11.09, 22.11.09, 29.11.09 தொண்டர் இராதா கிருஷ்ணனின் குழந்தைகளுக்கான சிறப்பு விடுமுறை வகுப்புகள் நடைபெற்றன

2.11.09:
30.11.09: கல்லூரி இளைஞர்களுக்கு செமஸ்டர் தேர்வுகள்

3.11.09: , 7.11.09:

14.11.09: அனைத்து அரங்களிலும் குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டது. மதுரைசீடு குழந்தைகள் அனைவருக்கும் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டு இனிப்புகள் வழங்கப்பட்டன கலை நிகழ்ச்சிகளை குழந்தைகள் வகுப்பு வாரியாக வழங்கினர்

14.11.09: மாலை கார்த்திக் பாரதி இளவரசி திருமண வரவேற்பு & நிச்சயதார்த்த விழாவில் ஏராளமான குழந்தைகளும் தொண்டர்களும் கலந்து கொண்டனர். சிநேகம் இல்ல பாட்டிகளுக்கு இலவச சேலைகள் வழங்கப்பட்டன

15.11.09: நிர்வாக அறங்காவலர் கார்த்திக் பாரதி அவர்களின் திருமண விழாவில் ஏராளமான குழந்தைகளும், இளைஞர்களும் பங்கேற்றனர். மதுரை சீடு இளைஞர்கள், குழந்தைகள் அனைவருக்கும் இது ஒரு குடும்ப விழாவாக அமைந்தது. திருமணத்தை யொட்டி புதுயுகம் சிறப்பிதழ் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டன.

## டிசம்பர் 2009

1.12.09: கார்த்திகை தீப நாளையொட்டி மதுரைசீடு அரங்கங்கள் தீப ஒளியில் மிதந்தன. எய்ட்ஸ் தினத்தையொட்டி குழந்தைகளுக்கு விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது.

2.12.09: SAKTHI FOUNDATION செந்துறை நம்பவீடு மான்டிசோரி பள்ளியின் பிரதீப், மாதேஷ், ஜெயராம் அவர்கள் மதுரைசீடு அரங்கங்களை பார்வையிட்டு குழந்தைகள் இளைஞர்களிடையே உரையாடினர்.

3.12.09: தொண்டர் இராதாகிருஷ்ணனின் ஓவிய வகுப்புகளில் குழந்தைகள் எனக்கு பிடித்த பள்ளி
6.12.09: மருத்துவமனை, வீடு என்ற தலைப்புகளில் ஓவியம் தீட்டினர் பாட்டு மற்றும் விளையாட்டுப்
13.12.09: போட்டிகள் நடத்தப்பட்டன.

4.12.09: சுவிஸ் நண்பர் தாரணி அவர்களின் பிறந்த நாளையொட்டி குழந்தைகள், இளைஞர்கள் தொலைபேசியில் வாழ்த்து தெரிவித்தனர். மாலை கனவுகள் அரங்கத்தில் AROUND THE WORLD IN 80 DAYS ஆங்கில திரைப்படம் திரையிடப்பட்டது.

11.12.09 முதல் 23.12.09: +1 மாணவர்களுக்கு அரையாண்டுத் தேர்வு தொடங்கப்பட்டது.

11,12.12.09: மண்டல பிரதிநிதி முத்துகணேஷ்(VIII) கன்னியாகுமரி FCMRP மண்டல கூட்டத்தில் கலந்து கொண்டார்

24.12.09: மதுரை சீடு-இல் கிறிஸ்துமஸ் தின விழா கொண்டாடப்பட்டது. சமூக பணியாளர்கள் ஜோஸ்வா சாமுவேல் ஜெயராஜ் மற்றும் ராமகிருஷ்ணனை ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்றனர். குழந்தைகள் பல்கலை கலை நிகழ்ச்சிகளை வழங்கினர். மாணவர் ஜேம்ஸ்(VII) கிறிஸ்துமஸ் தாத்தா வேடமணிந்து அனைவருக்கும் மகிழ்ச்சியூட்டினார்.

25.12.09: வண்டுகள் அரங்க குழந்தைகளுக்கு விளையாட்டு போட்டிகள் தொடங்கின. வேர்கள் அரங்க குழந்தைகள் பொங்கல் விழா கலைநிகழ்ச்சிகளுக்கான முன் தயாரிப்பு வேலைகளில் ஈடுபட்டனர்.

கனவுகள் அரங்க குழந்தைகளுக்கிடையே கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. மாலை 2012 ஆங்கில திரைப்படம் திரையிடப்பட்டது.

26.12.09: வாண்டுகள் அரங்ககுழந்தைகளுக்கு விடுமுறை முகாம் தொடங்கியது. முதல் நாளில் பாடல் பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

வேர்கள் அரங்க குழந்தைகளுக்கு தேக்வாண்டோ தற்காப்புக்கலை பயிற்சி முகாம் தொடங்கியது. துவக்கவிழா சிறப்பு விருந்தினர்களாக ஸ்கேட்டிங் பயிற்றுநர் திரு. ராஜா மற்றும் நண்பர் மணி கலந்து கொண்டு முகாமை துவக்கி வைத்தனர்.

மாலை கனவுகள் அரங்கத்தில் கங்கண சூரிய கிரகணம் பற்றிய விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது. கலிலியோ அறிவியல் மையத்தின் திரு. சத்யமாணிக்கம் மற்றும் அன்னை தெரசா மகளிர் பல்கலைகழகத்தின் விரிவுரையாளர் திருமதி. தேவி ஆகியோர் அறிவியல் சொற்பொழிவு வழங்கினர்.

27.12.09: வாண்டுகள முகாம் இரண்டாம் நாளான இன்று, நடன வகுப்புகள் நடைபெற்றன குழந்தைகளுக்கு தேவராட்டம் நாட்டார் கலை அறிமுகப்படுத்தப்பட்டது. வேர்கள் அரங்க குழந்தைகளுக்கு தேக்வாண்டோ பயிற்சி முகாம் இரண்டாம் நாளாக தொடர்ந்தது கனவுகள் அரங்கத்தினர் மார்கழி உற்சவம் கோலப்போட்டிக்கான பரப்புரையில் ஈடுபட்டனர் மாலை PIRATES OF CARIBEAN ஆங்கில திரைப்படம் திரையிடப்பட்டது.

28.12.09: வாண்டுகள் முகாமில் சமையல் பயிற்சி வகுப்பு நடைபெற்றது. தொண்டர்கள் உதவியுடன் குழந்தைகள் தாங்களே சமைத்து உண்டு மகிழ்ந்தனர். வேர்கள் அரங்க குழந்தைகளுக்கு தேக்வாண்டோ 3ம் நாள் பயிற்சி முகாம் நடைபெற்றது. கனவுகள் அரங்க குழந்தைகளுக்கு உள்ளரங்க விளையாட்டி போட்டிகள் நடைபெற்றன.

மாலை LORD OF THE RINGSஆங்கில திரைப்படம் திரையிடப்பட்டது.

29.12.09: மாஸ்க் செயதல் பயிற்சி வகுப்பு வாண்டுகள் முகாமில் நடைபெற்றது. வேர்கள் அரங்க குழந்தைகளுக்கு தேக்வாண்டோ 4வது நாள் பயிற்சி முகாம் நடைபெற்றது.

மாலை மதுரை சிடு குழந்தைகள் இளைஞர்களின் 1ஆம் ஆண்டு கூடுகை மார்கழி உற்சவம் கொண்டாடப்ட்டப்பட்டது. கரும்பாலை பொதுமக்களுக்கு கோலப்போட்டி நடத்தப்பட்டது. கோலப்போட்டியில் கலந்து கொண்டு வண்ணமிகு கோலமிட்டிருந்தனர்.

30.12.09:வாண்டுகள் முகாமில் இன்று குழந்தைகளுக்கான ஆடை அலங்கார போட்டி நடைபெற்றது. இன்று தேக்வாண்டோ பயிற்சிமுகாம் இறுதிநாள் குழந்தைகள் முகாமில் கற்றுக்கொண்டவற்றை வெளிப்படுத்தினர். பங்கேற்ற குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. முகாம் இறுதிநாள் சிறப்பு விருந்தினர்களாக நண்பர்கள் திரு.மதியழகன் திரு. வெங்கடேஷ் திரு.மணி ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர். மாலை வாண்டுகள் முகாம் நிறைவு நிகழ்ச்சி நடைபெற்றது. அமெரிக்கன் கல்லூரி சமூகவியல் துறை மாணவர்கள் கனி சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். மாலை கனவுகள் அரங்கத்தில் யோகி திரைப்படம் திரையிடப்பட்டது.

31.12.09: மதுரை சீடு புத்தாண்டு கொண்டாட்டத்தில். சிறப்பு விருந்தினர்களாக வழக்கறிஞர்கள் திரு. கருமலைராஜன் திரு. விஸ்வநாதன் ஆகியோர் பங்கேற்று புத்தாண்டு செய்திகளை வழங்கினர். குழந்தைகள் வண்ணமிகு நடன நிகழ்ச்சிகளை வழங்கினர்.

## ஜனவரி 2010

1.1.10 : வாண்டுகள் அரங்க குழந்தைகளுக்கு விளையாட்டு நாள் விழா திட்டமிடப்பட்டு விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டன மாலை கனவுகள் அரங்கத்தில் 2009ஆம் அண்டு சாதனைகளும், சோதனைகளும் என்ற தலைப்பில் குழந்தைகள் இளைஞர்கள் பங்கேற்ற விவாத நிகழ்ச்சி நடைபெற்றது.

2.1.10: வாண்டுகள் அரங்க குழந்தைகளுக்கு விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டன மாலை கோவை கல்லூரிப்பேராசிரியை ராஜி புத்தாண்டு கொண்டாட விருந்தினராக பங்கேற்று குழந்தைகள்.. இளைஞர்களிடையே உரையாடினார்

3.1.10: செல்லா மீனாட்சி அறக்கட்டளை இயக்குனர் திரு. வித்யா மற்றும் அமெரிக்கா விஸ்கான்சின் பல்கலைக் கழக பேராசியரியர் திரு. ஜோசப் எல்டர் ஆகியோர் மதுரை சீடுக்கு வருகை தந்து இந்திய கலாச்சாரம் என்ற தலைப்பில் உரையாற்றினர். குழந்தைகள் இளைஞர்களும் அம்பிகா திரையரங்கிற்கு சென்று அவதார் திரைப்படத்தை கண்டு ரசித்தனர்.

5.1.10 மதுரை சீடு நண்பர் ஹீணா அவர்களை தொண்டர்கள் அவரது வீட்டிலேயே சந்தித்து புத்தாண்டுவாழ்த்துகளை தெரிவித்தனர்.

6.1.10, 7.1.10, 8.1.10, 20.1.10:சக்தி பவுண்டேசன் நிறுவனர் திரு. பிரதீப் அவர்களின் தொலைபேசி வழியே வாழ்வியல் பயிற்சி வகுப்பு நடைபெற்றது. இரண்டாமாண்டு கல்லூரி இளைஞர்கள் பயன்பெற்றனர் தொண்டர் மருதுபாண்டி இரத்த தானம் செய்தார் .

10.1.10, 30.1.10: சக்தி பவுண்டேசன் நண்பர் திரு. முத்து USA தொண்டர்களுக்கு ஆங்கில பயிற்சி வகுப்பு நடத்தினார் இரண்டாமாண்டு கல்லூரி இளைஞர்கள் பயன்பெற்றனர்.

11.1.10: வான்முகில் கலைவிழாவிற்கான முன்னேற்றபாட்டு வேலைகள் நடந்தன.

12.1.10: இன்று தேசிய இளைஞர்கள் தினம் தொண்டர்கள் அனைவரும் சிற்றுண்டியுடன் இளைஞர் தினத்தை கொண்டாடினர். குழந்தைகளுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன

13.1.10: மாலை மெட்ரோபோல் ஹோட்டலில் வான்முகில் கலைவிழா நடைபெற்றது. பொங்கல் பண்டிகையை மையமாகக் கொண்டு குழந்தைகள் கலைநிகழ்சிகள் வழங்கினர் MASSACHUTES பல்கலைக்கழக 10 மாணவர்கள் மேலாண்மை துறை தலைவர் ஈஸ்வர்ஐயர் தலைமையில் இந்நிகழ்வை கண்டு களித்தனர். செல்லா மீனாட்சி அறக்கட்டளை இந்நிகழ்வுக்கு நிதி உதவி செய்திருந்தது.

14.1.10: மதுரை சீடு அலுவலகம் முன்பு பொங்கல் வைத்து ஆடிப்பாடி குழந்தைகள், இளைஞர்கள், பொங்கல் பண்டிகையை கொண்டாடினர்.

15.1.10: இன்று கங்கண சூரிய கிரகணத்தை முன்னிட்டு குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் உரிய கண்ணாடிகள் அணிந்து வாண்டுகள், வேர்கள், கனவுகள் அரங்க மாடிகளில் நின்று வானவியல் விந்தையை கண்டு ரசித்தனர். 100 குழந்தைகளுக்கு சூரியகிரகண கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

.16.1.10: கப்பலூரில் நடைபெற்ற FCMRP மாவட்டக் கூட்டத்தில் முத்துகேணஷ், ஜென்சி, சர்மிளா, விக்னேஷ்.(VIII) ஆகியோர் கலந்து கொண்டனர்.

19.1.10: செல்லாமீனாட்சி அறக்கட்டளை இயக்குனர் வித்யா அவர்களுடன் ஆகிய அமெரிக்க மாணவர்கள் மதுரை சீடுக்கு வருகை தந்து அவர்களின் கல்வி சம்பந்தமாக இளைஞர்களிடம் கலந்துரையாடினர்.

21.1.10: குழந்தைகளுக்கு செயல்முறை பயிற்சி அட்டைகளை பயன்படுத்தி கற்பிப்பது பற்றி நிதி அறங்காவலர் அன்பரசன், வாண்டுகள் அரங்க தொண்டர்களுக்கு பயிற்சி அளித்தார். இயக்குனர் மன்சூர்அலி தலைமையில் தொண்டர்கள் கூட்டம் நடைபெற்றது.

22.1.10: மதுரை சீடு நண்பர்கள், ஆதரவாளர்கள், சந்திரமோகன் - ஜெயந்தி, சீடு இளைஞர் சுப்புராஜ் ஆகியோரின் திருமணத்தில் இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

23.1.10: தானம் அறக்கட்டளை நடத்திய இரத்தசோகைக்கான மாரத்தான் ஓட்ட நிகழ்ச்சியில் குழந்தைகள், இளைஞர்கள் பங்கேற்றனர்.

23.1.10,24.1.10, குற்றாலத்தில் நடைபெற்ற மண்டல கூட்டத்தில் மண்டல பிரதிநிதி முத்துகணேஷ் கலந்து கொண்டார்.

24.1.10: மாலை கனவுகள் அரங்கத்தில் அனிமேசன் திரைப்படம் திரையிடப்பட்டது.

26.1.10:காலை மதுரைசீடு நிகழ்ச்சி அலுவலகம் முன்பு தேசியக்கொடியினை குழந்தைகள் பேரவை தலைவி முத்துமாரி ஏற்றினார். தொடர்ந்து **MSCF** கொடியை தலைவர் மாணிக்கராஜாவும் **MSYF** கொடியை தலைவர் முருகபாண்டியும் மதுரைசீடு கொடியை இயக்குனர் மன்சூர்அலி அவர்களும் ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினர். மாலை மதுரை கருவூல கணக்கு அதிகாரியும் மதுரை சீடு நண்பருமான பிரகாஷ் அவர்கள் இளைஞர்கள் குழந்தைகளிடையே உரையாற்றினர் .

30.1.10: மதுரை சீடு இளைஞர்கள் மதுரை மாரியம்மன் தெப்பத்திருவிழாவிற்கு சென்று வந்தனர்.

31.1.10: குழந்தைகளுக்கு உள்ளரங்க விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

## பிப்ரவரி 2010

1.2.10, 2.2.10: தல்லாகுளம் கமலாநகரில் மதுரைசீடு கல்விமயம் தொடங்குவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டு அதற்கான பணிகள் தொடங்கின.

3.2.10: தல்லாகுளம், கமலாநகர், குழந்தைகளுக்கு மாலை நேர கல்வி வகுப்புகள் ஆரம்பமாயின. மதுரை சீடு கனவுகள், வேர்கள் அரங்க குழந்தைகளுக்கு மாதிரித் தேர்வுகள் ஆரம்பமாயின குழந்தைகள் தமிழ்முதல் தாள் தேர்வினை இன்று எழுதினர்.

4.2.10: தொண்டர் மணிகண்டன் தேனி காற்றலைகளுக்கு சென்று வந்தார்.

4.2.2010 - 28.2.2010: மதுரை சீடு மாதிரித்தேர்வுகள் நடைபெற்றன

5.2.10: தொண்டர்கள் கூட்டம் நடைபெற்றது. மதுரைசீடு வலைதளம் மேம்பாட்டு பணிகள் நடைபெற்றன.

6.2.10: FCMRP மாவட்டக் கூட்டம் கப்பலூரில் நடைபெற்றது. மண்டலப் பிரதிநிதி முத்துகணேஷ் VIII கலந்து கொண்டார். மாலை சக்தி பவுண்டேசன் நண்பர் முத்து சுந்தரம் USA அவர்களின் ஆங்கில வகுப்பு நடைபெற்றது.

7.2.10: FCMRP மாவட்டக்கூட்டம் கப்பலூரில் நடைபெற்றது. மண்டல பிரதிநிதி முத்துகணேஷ் VIII, உறுப்பினர்கள் சர்மிளா ஜென்சிராணி விக்னேஷ் VIII ஆகியோர் கலந்து கொண்டனர்.

வலைதளம் மேம்பாட்டு பணிகள் நடைபெற்றன. காலை தொண்டர் இராதாகிருஷ்ணன் அவர்களின் சிறப்பு வகுப்புகள் நடைபெற்றன.

8.2.10: மதுரைசீடு ஆதரவாளர்கள் கலைச்செல்வி பாரிகணேசன், இலட்சுமி பாண்டியன் அவர்கள் அரங்கங்களை பார்வையிட்டனர், பாலாம்பிகை அவர்களின் ஆங்கில பயிற்சி வகுப்பு நடைபெற்றது. மூன்றாமாண்டு கல்லூரி இளைஞர்கள் பயன் பெற்றனர் .

10.2.10: ஆதரவாளர்கள் கலைச்செல்வி பாரிகணேசன் அவர்கள் அமெரிக்கா செல்வதையொட்டி இரயில்நிலையம் சென்று குழந்தைகள் பூங்கோத்து அளித்து அவரை வழியனுப்பி வைத்தனர்

11.2.10, 12.2.10, 13.2.10: நண்பர் பாலாம்பிகை (ஸ்ரீரங்கம்) அவர்களின் ஆங்கில பயிற்சி வகுப்பு நடைபெற்றது. மூன்றாமாண்டு கல்லூரி இளைஞர்கள் பயன்பெற்றனர்.

12.2.10: தொண்டர்கள் பைசர். சுல்தான் அலாவுதீன் முருகபாண்டி ஆகியோர் ஓட்டுநர் உரிமம் பெற்றனர் மதுரை சீடு சார்பில் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டன.

13.2.10: மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் நடத்திய டார்வினின் பரிணாமக் கொள்கை பற்றிய கட்டுரைப் போட்டியில் தொண்டர் சரண்யா முதல் பரிசு பெற்றார்.
குழந்தைகளின் மாதிரி கிராமசபை பற்றிய பத்திரிக்கையாளர்கள் சந்திப்பில் மண்டல பிரதிநிதி முத்துகணேஷ்VII கலந்து கொண்டார்.

14.2.10, 21.2.10, 28.2.10 காலை தொண்டர் இராதா கிருஷ்ணன் அவர்களின் சிறப்பு வகுப்புகள் நடைபெற்றன.

14.2.10: குழந்தைகளுக்கு மாதிரி கிராமசபை அமைப்பது தொடர்பான FCMRF கூட்டம் கப்பலூரில் நடைபெற்றது. மண்டல பிரதிநிதி முத்துகணேஷ்,VIII உறுப்பினர்கள் சர்மிளா, ஜென்சிராணி மற்றும் விக்னேஷ்VII ஆகியோர் கலந்து கொண்டனர்.

15.2.10: சுவிட்சர்லாந்து நண்பர்கள் **John** மற்றும் **Laura** மதுரை வந்தனர்.

16.2.10, 17.2.10: நண்பர்கள் **John** மற்றும் **Laura** மதுரை சீடு அரங்கங்களை பார்வையிட்டனர் மதுரை சீடு மூத்த தொண்டர் எய்ட்ஸ் கட்டுபாட்டு வாரியத்தின் ஆற்றுப்படுத்துனராக பணியாற்றும் கணேஷ்குமார் அவர்களின் நிச்சியதார்த்தம் மற்றும் திருமண நிகழ்வுகளில் மதுரை சீடு இளைஞர்கள் பங்கேற்றனர்.

17.2.10, 18.2.10: நண்பர்கள் **John** மற்றும் **Laura** கனவுகள் அரங்க குழந்தைகளுக்கு ஆங்கில இலக்கண வகுப்பு நடத்தினர்.

19.2.10: மதுரை சீடு மூத்த தொண்டர் ஆராய்ச்சியாளர் கௌதமன் நிகழ்ச்சி அலுவலகத்திற்கு வருகை தந்து உரையாடினர்.

20.2.10:, 21.2.10: நார்த் கேட் ஹோட்டலில் ஆங்கில ஆசியருக்கான பயிற்சி முகாம் நடைபெற்றது. 30க்கும் மேற்பட்ட இளைஞர்கள் இதில் கலந்து கொண்டு பயனடைந்தனர். OXFORD UNIVERSITY PRESS நன்கொடையளித்திருந்த புத்தகங்களை பயன்படுத்துவது. குறித்து முக்கியமாக வழிகாட்டப்பட்டது மற்றும் LAURA, JOHN தனித்தனியே தொண்டர்கள் பிரித்து வகுப்பெடுத்தனர். மதுரை சீடுக்கு சிறப்பான 3 ஆவது ஆசிரியர் பயிற்சி முகமாக இது அமைந்தது.

21.2.10: மாலை காந்தி மியூசியம் குமரப்பா குடிலில் மதுரைசீடு-இன் நிறுவன நாள் கொண்டாடப்பட்டது. நண்பர் LAURA, JOHN மதுரைசீடு கொடியை ஏற்றி வைத்தார். சிறப்பு விருந்தினராக அறங்காவலர் மாரியம்மாள் அவர்கள் கலந்து கொண்டார் தொடர்ந்து குழந்தைகள் வழங்கிய வண்ணமிகு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. வகுப்பு வாரியாக புகைப்படம் எடுக்கும் நிகழ்வும் நடைபெற்றது.

22.2.10: நண்பர்கள் மற்றும் சுவிஸ் திரும்புவதையொட்டி இளைஞர்கள் இரயில்நிலையம் சென்று அவர்களை வழியனுப்பி வைத்தனர்.
கோடைகால ஆங்கில பயிற்சி முகாம் தொடர்பாக கார்த்திக் பாரதி மற்றும் மன்சூர் அவர்கள் செல்லா மீனாட்சி அறக்கட்டளைக்கு சென்று விவாதித்தனர்.

27.2.10: 10,12 ஆம் வகுப்பு தேர்வெழுதுவோர்க்கு ஆலோசனை மற்றும் பயிற்சி வகுப்புகள் நடத்தபெற்றன

## மார்ச் 2010

1.3.10: பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வு தொடங்கியது. தமிழ் முதல் தாள் தேர்வெழுதினர். காலை அனைத்து மாணவர்களும் மதுரை சீடு கனவுகள் அரங்கத்தில் கூடி பிராத்தனை செய்தனர். காலை உணவு மதுரை சீடு சார்பில் வழங்கப்பட்டது.

2.3.10: 12ஆம் வகுப்பு மாணவர்கள் தமிழ் இரண்டாம் தாள் தேர்வெழுதினர்.

3.3.10: பதினொன்றாம் வகுப்பு மாணவர்களுக்கு முழு ஆண்டுத் தேர்வுகள் தொடங்கின இயக்குநர் மன்சூர் அலி தலைமையில் தொண்டர்கள் கூட்டம் நடைபெற்றது.

4.3.10: 12ஆம் வகுப்பு மாணவர்கள் ஆங்கிலம் முதல்தாள் தேர்வெழுதினர்.

5.3.10: அறங்காவலர் கார்த்திக் பாரதி தலைமையில் தொண்டர்கள் கூட்டம் நடைபெற்றது. வான்முகில் கலைக் குழுவின் பொங்கல் கலைநிகழ்ச்சிகளில் சிறப்பாக பங்கேற்று நடனமாடிய தொண்டர்கள் குழந்தைகள் கௌரவிக்கப்பட்டனர்.

12ஆம் வகுப்பு மாணவர்கள் ஆங்கிலம் இரண்டாம் தாள் தேர்வெழுதினர்.

7.3.10: காலை உள்ளரங்க விளையாட்டுகள் நடைபெற்றன. மாலை குமரன் S/O மகாலெட்சுமி திரைப்படம் திரையிடப்பட்டது. தொண்டர் மணிகண்டன் அவர்களின் இல்ல விழாவில் இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

8.3.10: இன்று உலக மகளிர் தினம் மதுரை சீடு பெண் குழந்தைகள் சூழலியல் பூங்கா சென்று , ஐஸ்கிரீம் உண்டு பெண்கள் தினத்தை கொண்டாடினர்.

சுவிஸ் நண்பர் ஜான் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டன

12ஆம் வகுப்பு மாணவர்கள் இயற்பியல், பொருளியல், உளவியல். தேர்வுகள் எழுதினர்.

10.3.2010: 8.3.2010, 11.3.2010, 13.3.2010, 11.3.2010

நண்பர் பாலாம்பிகை அவர்களின் ஆங்கில பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

11.3.10: 12ஆம் வகுப்பு வேதியியல், கணக்கு பதிவியல், தேர்வுகள் நடைபெற்றது.

12.3.10: 10ஆம் வகுப்பு மாணவர், இராம்கி, அவர்களின் தந்தை பரமசிவம் காலமானதையடுத்து இரங்கல் கூட்டம் நடைபெற்றது. மதுரை சீடு அரங்கங்களுக்கு விடுமுறை அளிக்கப்பட்டது.

13.3.10: 12ஆம் வகுப்பு தொழிற்கல்வி தேர்வு நடைபெற்றது முத்து சுந்தரம் (USA) அவர்களின் ஆங்கில வகுப்பு நடைபெற்றது.

14.3.10: மதுரை சீடு இளைஞர்கள், தொண்டர்கள், இராமநாதபுரத்தை அடுத்துள்ள உச்சிப்புளி கிராமத்திலுள்ள அரியமான் கடற்கரைக்கு சுற்றுலா சென்றனர் கடலில் குளித்து மகிழ்ந்தனர்.

15.3.10: 12ஆம் வகுப்பு கணிதம், விலங்கியல், சத்துணவு மற்றும் உணவு ஒழுங்குமுறை தேர்வுகள் நடைபெற்றன.

17.3.10: 12ஆம்வகுப்பு கணிணி அறிவியல் தேர்வு நடைபெற்றது.

18.3.10: தொண்டர் சுல்தான் அலாவுதீன் இரத்ததானம் செய்தார்.

19.3.10: 12ஆம் வகுப்பு உயிரியல், வரலாறு, வணிக கணிதம் தேர்வுகள் நடைபெற்றன.

22.3.10:12ஆம் வகுப்பு வணிகவியல், புவியியல், மனையியல், தேர்வுகள், நடைபெற்றன.

16.3.2010 முதல் 25.3.2010: புதுயுகம் தயாரிப்பு பணிகள்

19.3.10: 10ஆம் வகுப்பு தேர்வு எழுதும் மாணவர்களுக்கான ஆலோசனை பயிற்சி வகுப்புகள்

20.3.10:தலித் பெண்களுக்கு எதிரான மீறல்கள் குறித்து எவிடன்ஸ் நடத்திய கலந்தாய்வில் முனியசாமி, ராமச்சநதிரன், சரண்யா, அமுதா, தங்கலெட்சுமி, உமாமகேஸ்வரி போன்றோர் கலந்து கொண்டனர்.

23.3.10: பத்தாம் வகுப்பு தேர்வுகள் துவக்கம்

26.3.10:,27.3.10:,28.3.10: ,29.3.10,30.3.10,31.3.10: பள்ளி ஆண்டுத் தேர்வுகளுக்கான தாயரிப்பு பணிகள் மதுரை சீடு அறிக்கை பணிகள் மற்றும் அலுவலக பணிகள்

இதழ் வெளியீட்டுக் குழு

C.அருண்குமார் B.A , (தொண்டர் பொறுப்பாளர்)

V.திவ்யபாரதி (XI). M.மாணிக்கராஜ் (X). S.முத்துகணேஷ் (VIII). S.சர்மிளா (VIII)

குழந்தைகளின் புதுயுகம் தனிச்சுற்று சிற்றிதழ் வெளியீட்டு முயற்சிக்கு உதவுவோர்

Dr.மெல்லியல் அண்ணாமலை, சென்னை ஆஷா குழுவினர்

திருமிகு.வே.மாரியம்மாள், திருமிகு. அ.ச.கார்த்திக்பாரதி, திருமிகு. க.அன்பரசன்

மதுரை சீடு நிர்வாகக் குழு

தொடர்புக்கு : புதுயுகம் சிற்றிதழ்

மதுரை சீடு

அர்ஜீன் சண்முகா இல்லம், 439/1, கிழக்குத் தெரு, கரும்பாலை,மதுரை-20.

பேசி : 9894805446, 94425 37670, 0452-22537670

மின்னஞ்சல் : maduraiseed1999@gmail.com

வலைதளம் : www.ashanet.org # seednarpanigal

www.madurai-seed.org

# மதுரை சீடு மன்ற பொறுப்பாளர்கள் 2009–2010

| | | | |
|---|---|---|---|
| மதுரை சீடு குழந்தைகள் பேரவை | தலைவர்கள் | M.மாணிக்கராஜா, K.முத்துமாரி | |
| | அரங்கபிரதிநிதிகள் | வாண்டுகள் | ராம்குமார், ஆனந்த ஜோதி |
| | | வேர்கள் | சூர்யா, கௌசல்யா |
| | | கனவுகள் | மாணிக்கராஜா, முத்துமாரி |
| செந்தமிழ் நூலகம் | அரங்கபிரதிநிதிகள் | வாண்டுகள் | விஜயலெட்சுமி |
| | | வேர்கள் | சூர்யா |
| | | கனவுகள் | பிரியா |
| | | தேடல்கள் | S.சுல்தான்அலாவுதீன் |
| இலக்கிய மன்றம் | அரங்கபிரதிநிதிகள் | வாண்டுகள் | ராம்குமார் |
| | | வேர்கள் | அருண் |
| | | கனவுகள் | நாகலெட்சுமி |
| | | தேடல்கள் | M.அமுதா |
| புதுயுகம் சிற்றிதழ் | அரங்கபிரதிநிதிகள் | வாண்டுகள் | |
| | | வேர்கள் | முத்துகணேஷ், சர்மிளா |
| | | கனவுகள் | திவ்யபாரதி, மாணிக்கராஜா |
| | | தேடல்கள் | C.அருண்குமார் |
| தேன்கூடு வங்கி | அரங்கபிரதிநிதிகள் | வாண்டுகள் | ஜாஸ்மின் |
| | | வேர்கள் | திருவருட்செல்வி |
| | | கனவுகள் | அய்யப்பன் |
| | | தேடல்கள் | P.சரவணக்குமார் |
| வான்முகில் கலைகுழு | அரங்கபிரதிநிதிகள் | வாண்டுகள் | ராவுத்தர்நயினா |
| | | வேர்கள் | பாண்டிமுனிஸ்வரி |
| | | கனவுகள் | காயத்ரி |
| | | தேடல்கள் | R.பாஸ்கர்ராஜா |
| அறிவியல் குழு | அரங்கபிரதிநிதிகள் | வாண்டுகள் | முகேஷ்கண்ணா |
| | | வேர்கள் | தமிழ்செல்வி |
| | | கனவுகள் | பிரபு |
| | | தேடல்கள் | P.சரண்யாதேவி |
| சமூகஅறிவியல் குழு | அரங்கபிரதிநிதிகள் | வாண்டுகள் | மக்கத்துநிலவு |
| | | வேர்கள் | வரலெட்சுமி |
| | | தேடல்கள் | N.ராமச்சந்திரன் |
| விளையாட்டு மன்றம் | அரங்கபிரதிநிதிகள் | வாண்டுகள் | பூமாதேவி |
| | | வேர்கள் | செண்பகமுத்துமுனியாண்டி |
| | | கனவுகள் | மதன்குமார் |
| | | தேடல்கள் | சுரேஷ்ராஜா |
| மருத்துவக் குழு | அரங்கபிரதிநிதிகள் | வாண்டுகள் | சிவக்குமார் |
| | | வேர்கள் | மணிப்பாண்டி |
| | | கனவுகள் | உமாமகேஸ்வரி |
| | | தேடல்கள் | M.தங்கலெட்சுமி |
| பங்கேற்புக்கான குழந்தைகள் இயக்கங்களின் தமிழக மற்றும் புதுவை கூட்டமைப்பு மதுரை மாவட்ட பிரதிநிதிகள் | மதுரை சீடு குழந்தைகள் பேரவை பிரதிநிதிகள் | வேர்கள் | முத்துகணேஷ்(மண்டலபிரதிநிதி) சர்மிளா, ஜென்சிராணி விக்னேஷ்வரன் |
| | | தேடல்கள் | P.பாண்டியராஜன் |
| புதியவெளிச்சங்கள் | | தேடல்கள் | C.கற்பகஜோதி |
| இளைஞர்வங்கி | | தேடல்கள் | O.மணிகண்டன் |

| | | |
|---|---|---|
| மதுரை சீடு இளைஞர்கள்பேரவை | தலைவர்கள் | S.முருகபாண்டி, P.சரண்யாதேவி |
| | அரங்கபிரதிநிதிகள் | தேடலகள் விஜய, அழகிரி,கற்பகஜோதி |

# மதுரை சீடு பொறுப்பாளர்கள் - 2009-2010


செந்தமிழ் நூலகம்


மருத்துவ மன்றம்


FCMRP District Members


இலக்கிய மன்றம்


தேன்கூடு குழந்தைகள் வங்கி


புதுயுகம் இதழியல்மன்றம்


அறிவியல் மன்றம்


விளையாட்டு மன்றம்


Incharger - Pudhiya Velichangal Journal


சமூகஅறிவியல் மன்றம்


மதுரைசீடு குழந்தைகள் பேரவை


Incharger - Youth Bank


வான்முகில் கலைமன்றம்


மதுரை சீடு இளைஞர் பேரவை


Special Activity Volunteers Team


Teacher Training Camp Workshop


Madurai Seed Members

# MADURAI SEED

வாண்டுகள் அரங்கம்



I Std.



II Std.



III Std.



IV Std.

வேர்கள் அரங்கம்



V Std.



VI Std.



VII Std.



VIII Std.

கனவுகள் அரங்கம்



IX Std.



X Std.



XI Std.



XII Std.



*கமலா நகர் அரங்கம்*



*தேடல்கள் அரங்கம்*

**மதுரை சீடு அறக்கட்டளை நலிவுற்ற குழந்தைகள், இளைஞர்கள் மேம்பாடு மற்றும் குழந்தைகள் உரிமைக்காகவும், வளமைக்கல்விக்காகவும், பணி செய்யும் ஓர் தன்னார்வ தொண்டு நிறுவனமாகும்**